Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு+II
விலை ரூபா 7.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சிறியதோ,பெரியதோ, எந்த அளவுகளிலான
பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும்
எந்தநேரமும்
துரிதமாகவும் குறைந்த
கட்டணத்தில் அனுப்பிட
FedEx Express
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 சித்திரை - 07 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற அவ்வல் 04 (20.04.2005) புதன்கிழமை இதழ்:203

# புதிய பாப்பரசராக ரட்சிங்கர்!



(வத்திக்கான்)

256ஆவது பாப்பரசராக ஜேர்மனியைச் சேர்ந்த கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் (வயது 78) நேற்றிரவு தெரிவுசெய்யப்பட்டார். இவர் 16 ஆவது பெனடிக்ற் என அழைக்கப்படுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சென்.பீற்றர்ஸ் பசிலிகாவில் கூடிய உலகம் முழுவதையும் சேர்ந்த 117 கர்தினால்கள் இவரைப் புதிய பாப்பரசராகத் தெரிவு செய்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் புதிய பாப்பரசர் தெரிவுசெய்யப்படாததால், வத்திக்கான் மாளிகையிலிருந்து கரும்புகை வெளியிடப்பட்டது.

இதையடுத்து தொடர்ந்து நடத்தப்பட்ட தேர்தலில் நேற்று மாலை புதிய பாப்பரசராக ஜேர்மனியைச் சேர்ந்த கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் தெரிவுசெய்யப்பட்டார்.

வத்திக்கான் நேரப்படி நேற்றுமாலை 6 மணியளவில் சென்.பீற்றர்ஸ் பசிலிக்காவின் புகை போக்கி வழியாக வெண்புகை வெளிவந்ததையடுத்து அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஆரவாரம் செய்தனர்.

தொடர்ந்து மாலையில் மணி ஒலிக்கத் தொடங்கியது. இதன் பின்னர் 6.35 மணியளவில் புதிய பாப்பரசராக ஜேர்மனியின் கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக கர்தினால் ஜோர்ஜ் அர்ருரோ மெடினா எஸ்ரிவிட்ஸ் அறிவித்தார்.

இதையடுத்து சென்.பீற்றர்ஸ் பசிலிக்காவின் மாடத்தில் புதிய பாப்பரசர் 16 ஆவது பெனடிக்ற் (ரட்சிங்கர்) கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு காட்சி கொடுத்தார்.

அவர் தான் புதிய பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதை தெரிவித்ததுடன், மக்களுக்கு 15 நிமிடங்கள் ஆசீர்வாதம் வழங்கினார்.

புதிய பாப்பரசர் 16 ஆவது பெனடிக்ற் 1927ஆம் ஆண்டு பிறந்தவராவார்.



# கிழக்கு நிலைமைகள் குறித்து சொல்ஹெய்ம் நேரில் ஆராய்வு




(மட்டக்களப்பு)

நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்து - விடுதலைப் புலிகள், இராணுவ அதிகாரிகள், கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

நேற்றுக்காலை மட்டக்களப்புக்குச் சென்ற எரிக் சொல்ஹெய்ம் - 233 ஆவது பிரிகேட் தலைமையகத்தில் இராணுவ மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

இங்கு இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் குறித்தும் இராணுவ, விசேட அதிரடிப்படை அதிகாரிகளிடம் சொல்ஹெய்ம் கேட்டு அறிந்துகொண்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பின் பின்னர் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கொக்கட்டிச்சோலைக்குச் சென்று - சோலையகத்தில் புலிகள் தரப்பு முக்கியஸ்தர்களை சொல்ஹெய்ம் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தளபதி ராம், கோட்டத்தளபதி ரம



சோலையகத்தில் சொல்ஹெய்ம்

பேச்சுக்களை நடத்தினார்.

நேற்றுக்காலை மட்டக்களப்புக்குச் சென்ற எரிக் சொல்ஹெய்ம் - 233 ஆவது பிரிகேட் தலைமையகத்தில் இராணுவ மற்றும் விசேட அதிரடிப்படை அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது - மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் பாதுகாப்பு நிலைமை குறித்தும் - சென்று - சோலையகத்தில் புலிகள் தரப்பு முக்கியஸ்தர்களை சொல்ஹெய்ம் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தளபதி ராம், கோட்டத்தளபதி ரமணன், மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி கொலைகளுக்கு அரசே பொறுப்பு!

## சொல்ஹெய்மிடம் கேணல் பானு



(மட்டக்களப்பு)

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் ஆட்கொலைகளுக்கான முழுப்பொறுப்பும் அரச தரப்பையே சாரும் என்று நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் எடுத்துக் கூறியதாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலை - சோலையகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் அவர் கருத்துத் தெரிவிக்கையில்-

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் செயற்பட்டுவரும் ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்றும் - வெலிக்கந்த பிரதேசத்தில் இராணுவக் கட்டுப்பாட் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டமைப்பு எம்.பிக்களை றொக்கா இன்று சந்திப்பு!

(கொழும்பு)

மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று அதிகாலை கொழும்பு வந்த தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் கிறிஸ்ரினா றொக்காவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று காலை சந்தித்துப் பேசவுள்ளது.

இன்று காலை 11 மணியளவில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது - சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்ட இழப்புக்கள், பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டியதன் அவசியம், பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதில் ஏற்பட்டிருக்கும் தாமதத்தால் எதிர் கொள்ளப்படும் நெருக்கடிகள் மற்றும் சமாதான முயற்சிகளில் அரசாங்கத்தின் அக்கறையீனம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கிறிஸ்ரினா றொக்காவிடம் தாம் எடுத்துக்



கூறப்போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் நேற்றிரவு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் புதுடெல்கியில் இருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த கிறிஸ்ரினா றொக்கா (12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ பவுசர் மோதி ஓட்டோ சாரதி காயம்!

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் தண்ணீர் பவுசர் மோதியதில் ஓட்டோ சாரதி ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரியாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# கோப்பாய் கோட்ட மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

கோப்பாய் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு -

### 15 வயது ஆண்கள்

| | | |
|---|---|---|
| 100 மீற்றர் | 1 | ஜீ. பிறன்கில்லா |
| | 2 | ரி. பானுஜா |
| | 3 | எஸ். யதீனா |
| 200 மீற்றர் | 1 | ஜீ. பிறன்கில்லா |
| | 2 | ரி. தர்சிகா |
| | 3 | ரி. சன்சா |
| நீளம் பாய்தல் | 1 | ரி.சன்சா |
| | 2 | வை. நிசாந்தினி |
| | 3 | ரி. தாட்சாயினி |
| உயரம் பாய்தல் | 1 | ரி. தர்சிகா |
| | 2 | கே. சிவதுர்க்கா |
| | 3 | ரி. கஜனி |
| குண்டு எறிதல் | 1 | பீ. மதுரிகா |
| | 2 | ரி. காத்திகா |
| | 2 | கே. கமலரஜனி |
| தட்டெறிதல் | 1 | ரி. கார்த்திகா |
| | 2 | எஸ். யசோதா |
| | 3 | எஸ். சௌமினா |
| ஈட்டி எறிதல் | 1 | எஸ். யசோதா |
| | 2 | ரி. கார்த்திகா |
| | 3 | எஸ். செல்வதர்சினி |
| 4 X100 | 1 | பு.திரேசம்மாள் ம.கல்லூரி |
| | 2 | அத்தியர் இ.கல்லூரி |

### 17 வயது பெண்கள்

| | | |
|---|---|---|
| 100 மீற்றர் | 1 | வீ. ஜெனோரா |
| | 2 | வீ. சுமங்கலி |
| | 3 | ஏ. சாளினி |
| 200 மீற்றர் | 1 | பீ. சுமங்கலி |
| | 2 | கே. ரஜீனா |
| | 3 | கே. சுபாசினி |
| 400 மீற்றர் | 1 | கே. ரஜீனா |
| | 2 | எஸ். நிரோஜா |
| | 3 | எம். சிந்துஜா |
| 800 மீற்றர் | 1 | கே. ரஜீனா |
| | 2 | எஸ். சோபினா |
| | 3 | ரி. சுதர்சினி |
| 1500 மீற்றர் | 1 | ரி. சுதாஜினி |
| | 2 | எஸ். நிரோஜா |
| | 3 | எஸ். சோபினி |
| நீளம் பாய்தல் | 1 | எஸ் பபிலாசினி |
| | 2 | பீ. சுமங்கலை |
| | 3 | கே. குகதர்சினி |
| உயரம் பாய்தல் | 1 | எஸ். பபிலாசினி |
| | 2 | ஜே. சர்மிகா |
| | 3 | எஸ். சிந்து |
| குண்டு எறிதல் | 1 | ஜே. டக்ஸிகா |
| | 2 | எஸ். சாந்தலோசினி |
| | 3 | ஆர். நிரோஜனா |
| தட்டெறிதல் | 1 | ஜே. டக்ஸிகா |
| | 2 | எஸ். தபிலா |
| | 3 | கே. துஸாந்தினி |
| ஈட்டி எறிதல் | 1 | ஏ. மேரிசெந்தூரா |
| | 2 | எஸ். மேரிஜென்சிகா |
| | 3 | என். கிரிஜா |
| 4/100 | 1 | ஆவரங்கால் நடராஜ வித். |
| | 2 | இடைக்காடு ம.வி |
| | 3 | கோப்பாய் கிறி. கல்லூரி |
| 4/400 | 1 | புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி |
| | 2 | கோப்பாய் கிறி. கல்லூரி |
| | 3 | நடராஜ இராமலிங்க வித்தி. |

### 19 வயது பெண்கள்

| | | |
|---|---|---|
| 100 மீற்றர் | 1 | பீ. சரண்யா |
| | 2 | எம். சர்வானந்தி |
| | 3 | பீ. சிந்துஜா |
| 200 மீற்றர் | 1 | கே. மீரா |
| | 2 | ரி. சிந்துஜா |
| | 3 | பி. துளசிகா |

(தொடரும்...)

# யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமியின் ஆலயத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாட்டிலுள்ள ஸ்ரீவில்லி புத்தூரில் அமைந்துள்ள யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமிகள் ஆலய மண்டபத்துக்கான அடிக்கல் யாழ். மாநகரசபை ஆணையாளர் க. குணராசாவால் அண்மையில் நாட்டப்பட்டது.



யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி இந்தியா சென்று துறவறம் பூண்டார். அக்காலத்தில் சுப்பிரமணிய பாரதியாரின் ஞானக்குருவாக விளங்கி யாழ்ப்பாணத்து சுவாமிகளென அவரால் அழைக்கப்பட்டார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் சமாதியடைந்த இவர் நினைவாக ஆலயம் அமைத்து சிவலிங்கம் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

இந்த ஆலயத்துக்கு அருகில் பாரதியாரின் இன்னுமோர் குருவான குள்ளத்து சாமியின் சமாதியும் உள்ளது.

இந்த ஆலயத்தை ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சமூகத்தினர் பரிபாலித்து வருகின்றனர். அந்தச் சமூகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க ஆலயத்திற்கான முன் மண்டபத்தினை யாழ்ப்பாணத்திலுள்ள ஆறுமுக சுவாமியின் பேரப்பிள்ளைகள் கட்டிக்கொடுக்கவுள்ளனர்.

ஸ்ரீஆறுமுக சுவாமிகள் பற்றி பாரதியார் பாடிய பாடல் கோவிலில் அமைந்துள்ள உள்மண்டப சுவர் பலகையில் எழுதி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மாவட்ட மட்டத்திலான கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம்

பாடசாலைகளுக்கிடையிலான மாவட்டமட்ட கரப்பந்தாட்ட, வலைப்பந்தாட்டப் போட்டிகள் 20,21,22 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. கரப்பந்தாட்டப் போட்டிகள் சுன் னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நாளை முதல் வெள்ளிக்கிழமை வரையும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது.

வலைப்பந்தாட்டப்போட்டிகள் உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் இன்றுமுதல் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. (72)

# செயல் விளக்க விழாவும் புலநாள் நிகழ்வுகளும்!

(யாழ்ப்பாணம்)

தேங்காய் உற்பத்தியை பாரிய அளவில் பாதிக்கும் 'மைற்' பீடைத்தாக்கமும், கட்டுப்பாடும் மற்றும் தேங்காய் உற்பத்தியைக் கூட்டும் வழிமுறைகள் பற்றிய செயல் விளக்க விழாவும், புலநாள் நிகழ்வும் அச்சுவேலி, நாவற்காடு காட்டு மலை கந்த சுவாமி கோவிலடியில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில், தென்னைப் பயிற்செய்கை சபையின் தலைவர் ஜெயந்த குணதிலக கலந்து கொள்ளவுள்ளார்.

தென்னைப் பயிற்செய்கைச் சபையின் உதவிப் பிராந்திய முகாமையாளர் (வடக்கு) க. தெய்வேந்திரா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வரவேற்புரையை யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தி யோகஸ்தர் ஜெ. சத்தியேந்திரன் நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக தென்னை அபிவிருத்தி சபையின் நாற்றுமேடை நிர்வாக பிரதிப் பொது முகாமையாளர் அபேசேகரவும், விதைகள் பதில் பொது முகாமையாளர் காரியவசமும், கலந்து கொள்ளவுள்ளனர்.

தென்னைச் செய்கையில் 'மைற் பீடைத்தாக்கமும் கட்டுப்பாடும்' மற்றும் இளம், முதிர் தென்னைகளுக்கு உரம் இடல் முறை, நாற்று நடுதல், கருவண்டு, செவ்வண்டு கட்டுப்பாடு போன்ற அபிவிருத்தி பற்றிய புலநாள் செயல் விளக்க நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

# தேசிய எழுச்சிப் பேரவையின் புதிய நிர்வாக சபை தெரிவு

வலிமேற்கு தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம், வலிமேற்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு தலைமையில் கடந்த 10ஆம் திகதி வட்டுக்கோட்டை இந் துக் கல்லூரியில் நடைபெற்ற போது பின்வருவோர் புதிய நிர்வாகசபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

இ.சச்சிதானந்தம் (செயலாளர்), இ. முருகானந்தம் (உப செயலாளர்), இ. பொன்ராசா (பொருளாளர்), நிர்வாக சபை உறுப்பினர்களாக அ. ரகுநாதன், து. சுதர்சன், பொ. மகேந்திரன், க. செல்வராசா, க. இரத்தினேஸ்வரன், கா. குணசேகரம், த. நந்தகுமார், சி. புனிதவதி, து. கமலாதேவி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்தக் கூட்டத்தில் ஒலிபெருக்கி பாவனையின் போது அதன் சத்தத்தைக் கட்டுப்படுத்திப் பாவித்தல், அரச பஸ் சேவை - தனியார் பஸ்சேவை வேகக் கட்டுப்பாடு, நேரக் கட்டுப்பாடு பற்றிச் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி ஒழுங்கான போக்குவரத்துச் சேவையை சீர்செய்தல் போன்ற தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. (48)


**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

கமலஹாசன்,
மனிசா கொய்ராலா
நடித்த

**மும்பை xபிரஸ்**

(சி-3980)

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

தினசரி 5 காட்சிகள் (பு.நே.)
11.00, 3.00,7.00
இரவு விசேட காட்சியாக
10.00, 1.30

புதுவருட பிரமாண்ட வெளியீடு

சுப்பஸ்ரார்

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்

சிவாஜி புறொடெக்ஷனின்



**சந்திரமுகி**

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

(C/3979)

**மனோகரா திரையரங்கு** யாழ்ப்பாணம்

சித்திரைப் புத்தாண்டு வெளியீடாக

இளைய தளபதி விஜய், போய்ஸ் புகழ் ஹரிணி.

காட்சி நேரம் : (பு.நே)
10.30, 2.30,
6.30, 9.30

விசேட காட்சிகளும் உண்டு



**சச்சின்**

ரிக்கெட் முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.


## இலங்கைவங்கி - முக்கிய அறிவித்தல்

எமது யாழ். மேற்றரக்கிளை, யாழ். இரண்டாம் கிளை மற்றும் திருநெல்வேலிக் கிளை வாடிக்கையாளருக்கு விரைவான வங்கிச் சேவையை வழங்குவதற்கான புதிய கணனிமுறை ஒன்றினை அறிமுகம் செய்ய இருப்பதால் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் கீழ்குறிப்பிட்ட அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினை தெரிவித்துக் கொள்கிறோம்.

1. எதிர்வரும் சனிக்கிழமை (23.04.2005) அன்று வங்கி திறக்கப்படமாட்டாது.
2. தன்னியக்கப்பணம் வழங்கும் இயந்திரம் (ATM) 21.04.2005 வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியில் இருந்து 25.04.2005 திங்கட்கிழமை பிற்பகல் 8 மணிவரை மூடப்பட்டிருக்கும்.
3. 21.04.2005 வியாழக்கிழமை காலை 11.00 மணிவரை மட்டுமே வங்கி திறக்கப்பட்டிருக்கும்.

*உதவிப்பொது முகாமையாளர்*
*இலங்கை வங்கி,*
*வடபிராந்திய அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*

(C/4065)

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) முறைசாராக் கல்விப் பரிவு

### முறைசாராக் கல்விப் பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி பிரிவின் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்லூரிப் படிப்பை விட்டு வெளியேறிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சகலரும் கல்லூரியில் உள்ள விண்ணப்பப்படிவத்தை 19.04.2005 லிருந்து பெற்று 25.04.2005 திங்கட்கிழமைக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக நேரிலோ அன்றித் தபால் மூலமோ விண்ணப்பிக்க முடியும்.

பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும் திகதி 30.04.2005.

பாடநெறிகள்

1. கணனி அடிப்படைக் கற்கைநெறி (Ms Word, Ms Excel) (6மாதம்)
2. கணனி தட்டச்சுப் பயிற்சிநெறி (ஆங்கிலம், தமிழ்) (6 மாதம்)
3. வீட்டு மின்னிணைப்பு (6 மாதம்)
4. சாரதிப் பயிற்சிநெறி (இலகு வாகனம்) (3 மாதம்)
5. வள்ளங்களுக்கான வெளியிணைப்பு இயந்திரம் பழுதுபார்த்தல்
6. மின் ஒட்டுவேலைப் பயிற்சி (6 மாதம்)

குறிப்பிட்ட நெறிகளுக்கு குறைவாக விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறின் அப்பாடநெறிகள் இரத்துச் செய்யப்படும்.

க. இராசதுரை
அதிபர்.

(C/4068)

## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து 1/4 மைல் தூரத்தில் அம்மன் வீதியில் 28 பரப்பு காணியும், பயன்தரும் மரங்களுடன் இரண்டு பெரிய வீடுகளும் கிணறு தண்ணீர் தாங்கியுடன் உள்ளது. முழுதாகவும், பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி S. மகேந்திரன், அரசடி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

T.P - 0602212952, 0712303732, 0714120616, 0777-732558. (1130)

## சட்டக் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கை சட்டக் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பப்பத்திரங்களை இன்று முதல் மே மாதம் 31 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 9 மணி முதல் 12 மணிவரையும், பிற்பகல் 1.30 மணி முதல் 3 மணிவரையும் பெற்றுக் கொள்ள முடியுமென இலங்கை சட்டக் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் க.பொ.த பரீட்சையின் பழைய பாடத் திட்டத்திற்கு அமைய, நான்கு பாடங்களிலும், புதிய பாடத்திட்டத்திற்கமைய 3 பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருக்க வேண்டும். இதைவிட க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில மொழியிலும் தமிழ் அல்லது சிங்கள மொழியிலும் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை இந்த வருடம் ஜூன் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் - அதிபர், இலங்கை சட்டக் கல்லூரி, இல.244, புதுக்கடைத் தெரு, கொழும்பு -12 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாவட்ட, பிரதேச செயலர்களுக்கு விசேட அதிரடிப்படைப் பாதுகாப்பு

கிழக்கு மாகாணத்தின் மாவட்ட மற்றும் பிரதேச செயலர்களுக்குப் பாதுகாப்பை வழங்கும் வகையில், விசேட அதிரடிப்படையினர் புதிய திட்டமொன்றை அமுல்படுத்தியுள்ளனர்.

திருக்கோவில் பிரதேச செயலர் ஏ.கே.தவராஜா சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி, பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் லியூக் தெரிவித்தார்.

இதன்படி மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட செயலர்களுக்கும், பிரதேச செயலர்களுக்கும் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (தே)

## அரசின் விசேட பிரேரணையை ரத்துச் செய்யக் கோரி மனு!

(கொழும்பு)

சுனாமி தொடர்பாக அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விசேட பிரேரணை, அரசியல் அமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையில் - சுனாமியின்போது காணமற்போனவர்கள் மற்றும் தகவல் தெரியாதவர்களுக்கு மரணச் சான்றிதழை வழங்கத் தீர்மானித்துள்ளமை- உயிர்வாழும் மனித உரிமையை மறுக்கும் செயலாகும் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இலங்கையின் அரசியல் அமைப்புக்கு முரணானது என்றும், அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அரசாங்கத்தின் பிரேரணையை நிறைவேற்றவேண்டுமானால், மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறப்படவேண்டும் என்றும் மனுதாரரின் தரப்பு மனுவில் தெரிவித்துள்ளது. (01)

## நிரந்தர தீர்வை எட்டமுடியாது அரசாங்கம் தோல்வி காணும்!

### டி.யூ.குணசேகர கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை எட்டமுடியாதுபோனால், தோல்வி கண்ட நாடாக இலங்கை மாறுமென அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டி.யூ. குணசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினையைத் தனிப்பட்ட ஒரு கட்சியோ அல்லது குழவோ தீர்த்து வைக்க முடியாது. நாட்டிலுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணாமற்போனால், தோல்விகண்ட நாடாக இலங்கை மாறுவதைத் தவிர்க்கமுடியாது. தூர நோக்கம் கொண்ட இந்த நாட்டுத் தலைவர்கள் - இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முன்வராதுபோனால், நாடு சிதறுண்டு போகும்என்றும்அவர்தெரிவித்தார்.(தே)

## பலாலி விமான ஓடுபாதை புனரமைப்பு விரைவில் இந்தியாவுடன் - உடன்பாடு

(கொழும்பு)

இந்தியாவுடன் பலாலி விமானத்தளம் புனரமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கம் விரைவில் செய்து கொள்ளவிருப்பதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

ஏற்கனவே பலாலி விமானப் படைத்தள ஓடு பாதையைப் புனரமைப்பதற்கான ஒப்பந்தத்தை இந்தியாவுடன் செய்து கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தபோதும் - பல்வேறு காரணங்களால் இது தடைப்பட்டது.

எனினும், இந்தியத்தரப்பில் இந்த ஒப்பந்தத்தை செய்து கொள்ளுமாறு தற்போது வற்புறுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதால் - இலங்கை அரசு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இரு நாட்டு அரசுகளும் இதை உறுதி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (01)

## பொதுக் கட்டமைப்பில் வவுனியா - மன்னாரை சேர்க்க முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு!

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் அழிவுகளுக்குள்ளான வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக வழங்கப்படும் உதவிகளைப் பங்கிடு வதற்காக அமைக்கப்படவுள்ள ஒருங்கிணைந்த கட்டமைப்பில் - மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்த்தால், நாடாளுமன்றத்திலும், வெளியிலும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு சில அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த கட்டமைப்புச் செயற்பாடுகளில் முதலில் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மட்டுமே சேர்க்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால், தற்போது வவுனியா, மன்னார் ஆகிய இடங்களையும் சேர்த்து விடுதலைப் புலிகள் கோரியிருப்பதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உட்படுத்தவேண்டியது இடைக்கால நிர்வாக அலகுக்கு மட்டுமே என்றும், சுனாமி உதவிகளைப் பங்கிடுவது போன்ற குறுகிய கால வேலைத் திட்டங்களுக்காக இவற்றைச் சேர்ப்பதற்கு அவசியம் இல்லை எனவும் முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. (தே)

## ஆசிரிய பயிற்சி கலாசாலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன!

(கொழும்பு)

ஆசிரி_ பயிற்சிக் கல்லூரிகளின் இரண்டு வருட ஆசிரிய பயிற்சிப் பாடநெறிகளைப் பயில்வதற்காக அரசாங்க மற்றும் தனியார் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் பட்டதாரி அல்லாத ஆசிரியர்களிடமிருந்து கல்வியமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மகரகம தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் தொலைக்கல்வி பாடநெறி, பிறின்செற் ஆசிரிய பயிற்சி என்பவற்றைப் பூர்த்திசெய்யாத ஆசிரியர்களும், நிறுவன ரீதியான பயிற்சிக் கலாசாலைப் பயிற்சிக்கென விண்ணப்பிக்கலாம். இவர்களுக்கு வழங்கப்படும் இறுதிச் சலுகை இதுவென்பதால் இந்தமுறை தவறாது விண்ணப்பிக்குமாறு கல்வியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

வயதுக் கட்டுப்பாடின்றி பயிற்சி வழங்கப்படுவதுடன், பயிற்சியின் நிறைவில் சித்தியடைந்தவர்கள் இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 03 வகுப்பு 01 இல் நியமனம் பெறுவர்.

தமிழ்மொழிமூல ஆசிரிய யாழ். மாவட்ட விண்ணப்பதாரிகள் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கும், வன்னி மற்றும் கிளிநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகள், வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரிக்கும், ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கும் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆங்கிலத்தில் பயிற்சிபெற விரும்பும் விண்ணப்பதாரிகள் இசுருபாயவிலுள்ள கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக் கிளைக்குத் தமது விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழி ஊடான இரண்டு விண்ணப்பங்களும், எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டுமெனவும் கல்வி யமைச்சு அறிவித்துள்ளது.

## தாக்குதலில் சிப்பாய் பலி

(பொலனறுவ)

பொலனறுவ மாவட்டத்திலுள்ள மின்னேரியா இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ சார்ஜன்ட் ஒருவர் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

பொலனறுவ பராக்கிரம சமுத்திரத்துக்கு அருகில் வைத்து இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த ஜெகத்குமார பௌஹெட்டிபொல என்ற சார்ஜன்டே வைத்தியசாலையில் மரணமானார். (01)

## ஜே.வி.பிக்கு உதவி வழங்குவதற்கு சுதந்திரக் கட்சிக்குள் குழு அமைப்பு!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையே தோன்றியுள்ள சிக்கலால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிலிருந்து ஜே.வி.பி. விலகிச் செல்வதைத் தடுப்பதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளே ஜே.வி.பிக்கு ஆதரவு வழங்கும் குழுவொன்று அமைக்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தக் குழுவைக் கட்டியெழுப்பி, ஆதரவு நடவடிக்கைகள் தீவிரப்படுத்துவதற்கு பொருட்டு, சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே பல சுற்று இரகசியப் பேச்சுக்கள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

அதேபோன்று ஜே.வி.பி.நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருடனும், சம்பந்தப்பட்ட அமைச்சர் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு விலகாது, அந்தக் கட்சியிலேயே இருந்துகொண்டு உள்ளக கிளர்ச்சியினூடாக இந்தக் குழுவைக் கட்டியெழுப்பி, நடவடிக்கைகளை மேற் கொள்வதே இதன்நோக்கமாகும்.

இதற்குத் தேவையான ஆரம்பத் திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப் பட்டுவருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தை மற்றும் சமாதானச் செயற்பாடுகள் தொடர்பான நோர்வேயின் மத்தியஸ்தம், ஒருங்கிணைந்த கட்டமைப்பு, தனியார் மயப்படுத்தும் கல்விச் சீர்திருத்தம் மற்றும் பிரதான அரசியல் விடயங்களில் ஜே.வி.பி. கொண்டுள்ள நிலைப்பாட்டுக்கு, சுதந்திரக் கட்சிக்குள் இருந்துகொண்டே ஆதரவு வழங்குவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அதேவேளை - இந்த விடயங்கள் குறித்து, ஜனாதிபதி என்ன நிலைப்பாட்டில் இருந்தாலும், அது குறித்துக் கவனத்தில் எடுக்காது நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதே இந்தக் குழுவின் எண்ணமாகவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதி அமைச்சர்கள் ஒன்றியம் - ஜே.வி.பியை விமர்சித்துக் கொண்டு, ஜனாதிபதியைப் பாதுகாக்கும் செயற்பாடுகளைப் பின்பற்றுவதால், பலவித அரசியல் வழிமுறைகளைப் பாவித்து, அவர்களை வெற்றி கொள்வதன் மூலம், பலமிழக்கச் செய்ய முடியும் என்பதும் இந்தக் குழுவின் திட்டமெனவும் கூறப்படுகிறது. (தே)

## புலிகளுக்கு ஆதரவாக கோஷமிட்டதற்காக கைதானவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கோஷமிட்டதாக இந்தியப் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கில் - பெரியார் திராவிடர் கழகத்தின் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், பொதுச் செயலாளயர் கோவை இராமகிருஸ்ணன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் பெரியார் திராவிடர் கழகம் சார்பாக - சாதி ஒழிப்பு மாநாடு 1997 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி நடந்தது. இந்த மாநாட்டை ஒட்டி ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில் சென்றவர்கள் விடுதலைப் புலிகள் வாழ்க என்றும், அந்த அமைப்பின் தலைவர் பிரபாகரன் வாழ்க என்று பல வித கோஷங்களை எழுப்பியதாக முறைப்பாடு செய்யப்பட்டது.

ஆனூர் ஜெகதீசன், கோவை இராமகிருஸ்ணன் ஆகியோர்மீது இந்தியக் குற்றப் பிரிவுப் பொலிஸார் வழக்குத் தொடுத்தனர். இந்த வழங்கு சென்னை சைதாப்பேட்டை 11 ஆவது தெரு நகரக் குற்றவியல் நடுவர் பிரவுதாஸ் முன்னிலையில் - கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நடந்தது. குற்றச்சாட்டுகள் அரசதரப்பில் சரிவர நிரூபிக்கப்படவில்லை என்று கூறிய நீதிபதி - இருவரையும் வழங்கிலிருந்த விடுதலை செய்வதாக நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார்.

## ரத்வத்தவின் காலத்தில் மின்சாரசபையில் ஊழல்கள்

(கொழும்பு)

மின்சாரசபைத் தனியார் மயமாக்கும் நடவடிக்கையைப் பொதுஜன முன்னணி அரசாங்கமே ஆரம்பித்தது என, ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணா நாயக்க வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் -

மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சராக அனுருத் தரத்வத்த இருந்தபோது, மின்சாரசபையில் ஊழல்கள் இடம்பெற்றிருந்தது. ஜே.வி.பியின் தொழிற்சங்கங்களின் தொழிற்பாடுகளின் காரணமாக அரசுக்குத் தனியார் மயப்படுத்தும் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லமுடியாமல் இருந்தது. மக்களுக்குக் குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்குவதே அரசின் கடமை எனவும் அவர் தெரிவித்தார். (01)

## பொலிஸாரின் தாக்குதல்; ஓட்டோ சாரதி மரணம்!

(கொழும்பு)

மகரகம பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவர் தாக்குதலுக்குள்ளாகி இறந்துள்ளதாக - ஆசிய பிராந்திய மனித உரிமை ஆணைக் குழுவுக்குப் புகார் கிடைத்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் கைதுசெய்யப்பட்ட ஓட்டோ சாரதி ஒருவர் மகரகம பொலிஸாரால் தாக்குதலுக்குள்ளாகி இறந்ததாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக தாம் கூடிய கவனத்தைச் செலுத்துவதாக ஆசிய மனித உரிமைகள் சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, இறந்த ஓட்டோ சாரதியின் மனைவி - தனது கணவர் பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளாகியே மரணமானதாக முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து பொலிஸ் பொறுப்பதிகாரி மகேஸ் பெரேரா கருத்துத் தெரிவிக்கையில் -

இந்த நபர் குடிபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டார். பொலிஸாரின் தாக்குதல் தொடர்பாக விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம் எனவும் தெரிவித்தார். இதற்கிடையில் இறந்தவர் குறித்து பொலிஸ் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யவும் தயாராகிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (01)

# ஐ.சி.சியின் தடையை எதிர்த்து மீண்டும் முறையீடு செய்வேன்!

## கங்கூலி தெரிவிப்பு



(கொல்கத்தா) ஐ.சி.சி. ஆறு போட்டிகளில் விளையாட விதித்த தடையை எதிர்த்து மீண்டும் முறையீடு செய்யப் போவதாக கங்கூலி அறிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி கான்பூர் ஒருநாள் போட்டியில் மெதுவாக பந்து வீசியதற்காக கப்டன் கங்கூலி 6 போட்டிகளில் விளையாடக்கூடாது என்று நடுவர் தடைவிதித்தார். ஏற்கனவே அவர் 2 போட்டிகளில் விளையாடவில்லை. இதனால் இன்னும் 4 போட்டிகளில் அவர் விளையாடமுடியாது.

இது இப்படி இருக்க கங்கூலி தனக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து சர்வதேச கிரிக்கெட் சபைக்கு முறையீடு செய்தார். அவருடைய முறையீடு நிராகரிக்கப்பட்டது. ஐ.சி.சி. விசாரணை அதிகாரி மைக்கல் பெலோப் நேற்றுமுன்தினம் தனது தீர்ப்பை அறிவித்தார். கங்கூலிக்கு 6 போட்டிகளில் தடை விதிக்கப்பட்டது சரியே என்று அவர் தீர்ப்புக் கூறினார். அவருடைய இந்தத் தீர்ப்பு 23 பக்கங்களில் விரிவாக அச்சிடப்பட்டு கங்கூலிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்தநிலையில், கங்கூலி கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசும்போது -

6 போட்டிகளில் ஆட தடைவிதித்து எனக்கு விதிக்கப்பட்ட தண்டனை சரியானதல்ல. இதை எதிர்த்து நான் மீண்டும் முறையீடு செய்வேன். அதில் தீர்ப்பு வருவதற்கு முன்னதாக கடும்பயிற்சி எடுத்து நான் மீண்டும் சிறந்த ஆட்டத்திறன் கொண்ட வீரனாக மாறுவேன்.

ஐ.சி.சி. எனக்கு தனது தீர்ப்பை ஒரு அறிக்கையாக அனுப்பி வைத்திருக்கிறது. என்னைக் கூப்பிட்டு கருத்துக் கேட்கவில்லை. நான் யாரிடமும் நேரில் என் விளக்கத்தை அளிக்க எனக்கு வாய்ப்புத் தரப்படவில்லை எனத் தெரிவித்தார்.

# சானியா மிர்சா முன்னேறினார்!



(புதுடெல்கி) ரெனிஸ் தரவரிசையில் சானியா மிர்சா முன்னேறியுள்ளார்.

இந்தியாவின் புதிய ரெனிஸ் நட்சத்திரமான சானியா மிர்சா உலக தர வரிசையில் இதுவரை 75ஆவது இடத்திலிருந்தார். தற்போது அவருக்குக் கிடைத்துள்ள புள்ளி 464 என கணக்கிடப்பட்டுள்ளது.

இதனால் தரவரிசையில் அவருடைய இடம் முன்னேற்றம் அடைந்துள்ளது. அவர் இப்போது 73ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். சானியா மிர்சா தற்போது தோள் பட்டைக் காயத்தால் விளையாடாமல் இருந்து வருகிறார். அவர் பெடரேசன் கிண்ணப் போட்டியில் பங்கேற்பாரா என்பதும் சந்தேகமாக உள்ளது.

# விளையாட்டு

# இந்திய அணியில் மாற்றங்கள் தேவை!

## ராவிட் சொல்கிறார்



(புதுடெல்கி) இந்திய அணியில் புதிய வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து மாற்றம் செய்யவேண்டும் என்று கப்டன் ராவிட் யோசனை கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி ஒருநாள் போட்டித் தொடரில் பாகிஸ்தானிடம் படுதோல்வி அடைந்தது. இது இந்திய அணி வீரர்களுக்கு மட்டுமன்றி, கிரிக்கெட் நிர்வாகிகளுக்கும், நாடு முழுவதும் உள்ள ரசிகர்களுக்கும் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது.

இந்திய அணியில் சிரேஷ்ட ஆட்டக்காரர்கள் இப்போது வலுவிழந்து விட்டார்கள். எனவே, அணியை மாற்றியமைக்கவேண்டும். புதிய வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் இந்தியா முழுவதுமுள்ள ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

இதை எதிரொலிக்கும் வகையில் கப்டன் ராவிட்டும் கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் இது குறித்துக் கூறுகையில் -

ஒருநாள் போட்டித் தொடரில் முதல் 2 ஆட்டங்களை இந்தியா வென்றிருந்தது. அப்படி இருந்தும் கூட தொடரை இழந்தது மிகவும் வேதனையைத் தருகிறது. ஒருநாள் போட்டியில் முதல் 15 ஓவர் என்பது துடுப்பாட்டத்தில் முக்கியமானதாகும். இதை பாகிஸ்தான் வீரர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். இந்திய வீரர்கள் கோட்டைவிட்டு விட்டார்கள்.

பொதுவாகவே ஒருநாள் போட்டிகளில் நம்முடைய வீரர்கள் சமீப காலமாக சரியாக விளையாடுவது கிடையாது. சிறந்த சகலதுறை ஆட்டக்காரர்கள் அணிக்குத் தேவையாக இருக்கிறது. எனவே இந்திய அணியில் மாற்றம் தேவை. புதிய வீரர்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதைப் பற்றி தேர்வுக் குழுவினர் சிந்திக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

# அமெரிக்க கிரிக்கெட் போட்டி; வீரர்கள் திரட்டும் பணி தீவிரம்!

அமெரிக்காவில் நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டியில் இந்திய வீரர்கள் ஷேவாக், கும்ளே ஆகியோர் விளையாடவுள்ள அதேவேளை, டெண்டுல்கர், யுவராஜ் சிங் ஆகியோரைச் சேர்த்துக்கொள்ள பேச்சு வார்த்தை நடைபெற்றுவருகிறது.

அமெரிக்காவில் ஜூன் மாதம் 16, 18, 19 ஆகிய திகதிகளில் 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன. ஹூஸ்டன் நகரில் இந்தப் போட்டியை அங்குள்ள கிரிக்கெட் சங்கம் நடத்துகிறது.

இந்தப் போட்டிகளில் விளையாட இந்திய வீரர்கள் ஷேவாக், கும்ளே, பாகிஸ்தான் வீரர்கள் அப்ரிடி, மொகமட் சமி ஆகியோர் ஒப்பந்தமாகி இருக்கிறார்கள். இவர்கள் உலக அணியில் இடம்பெற்று விளையாடுகிறார்கள். உலக அணியை எதிர்த்து அமெரிக்க அணி விளையாடவுள்ளது.

அமெரிக்காவில் கிரிக்கெட்டை பிரபலப்படுத்தும் நோக்கத்தில் இந்தப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. உலக அணியில் விளையாடுவதற்காக சச்சின் டெண்டுல்கர், இன்சமாம் , சொகைப் அக்தர், யுகானா, யுனுஸ்கான், யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங், இர்பான் பதான் ஆகியோருடனும் பேச்சு நடப்பதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் உலக அணியில் விளையாடுவதற்காக மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்கள் பவல், ஹிண்ட்ஸ், இலங்கை வீரர்கள் ஜெயவர்த்தன, சமிந்த வாஸ் ஆகியோருடனும் பேச்சு நடப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்திய-பாகிஸ்தான் வீரர்கள் இந்தப் போட்டிகளில் பங்கேற்பதற்காக அந்த நாட்டு கிரிக்கெட் சபைகளிடமிருந்து தடையில்லா சான்று வாங்கப்பட்டுவிட்டது. முதல் இரண்டு போட்டிகளும் 45 ஓவர்கள் அடிப்படையிலும், மூன்றாவது போட்டி 50 ஓவர்கள் அடிப்படையிலும் நடைபெறும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் கூறினார்கள்.

# உலகக்கிண்ணப் போட்டியில் இந்திய அணி பிரகாசிக்கும்!

## ஜோன் ரைட் தெரிவிப்பு



பாகிஸ்தானுடனான ஒருநாள் தொடரில் 2:4 என்ற அடிப்படையில் இந்திய அணி தோல்வியைச் சந்தித்ததால், சீற்றம் கொண்ட ரசிகர்கள் இந்திய வீரர்களின் படங்களைத் தீயிட்டெரிப்பதைப் படத்தில் காணலாம்.



(புதுடெல்கி) 2007 இல் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணி பிரகாசிக்கும் என்று இந்தியாவின் முன்னாள் பயிற்சியாளரும் நியூஸிலாந்து அணியின் முன்னாள் கப்டனுமான ஜோன் ரைட் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு எதிராக டெல்கியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஒருநாள் போட்டியுடன் இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகினார் ரைட். இவர் சுமார் 5 ஆண்டு காலம் இந்திய அணிக்கு பயிற்சி அளித்தார்.

பரிசளிப்பு நிகழ்ச்சியின் போது ரைட்டுக்கு நினைவுப் பரிசு வழங்கி இந்திய கிரிக்கெட் சபை அவரைக் கௌரவித்தது.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் ரைட் பேசும்போது-

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை 2-4 என இழந்தாலும், 2007இல் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியில் கிண்ணத்தை வெல்லும் அணிகளில் ஒன்றாக இந்தியா இருக்கும். அதற்கேற்ற ஆற்றலுள்ள வீரர்கள் இந்திய அணியில் உள்ளனர்.

அணியில் உள்ள வீரர்கள் அனைவரும் நிச்சயம் திறமையை மேம்படுத்தும் திறனைக் கொண்டுள்ளனர். ஆனால், அதற்கு அவர்கள் நிறைய உழைக்க வேண்டும். டெஸ்ட் தொடர்களில் இந்திய வீரர்கள் நன்றாகவே ஆடினர்.

பாகிஸ்தானுடனான ஒரு நாள் தொடர் தோல்விக்கு என்ன காரணம் என்பதை அணித் தேர்வாளர்கள்தான் ஆய்வு செய்யவேண்டும். ஆனால், என்னைப் பொறுத்தவரை அணி சிறப்பாகவே விளையாடியது. இந்திய ரசிகர்கள் அளித்த ஆதரவும் மறக்க முடியாது என்றார் ரைட்.

அவரது எதிர்காலத் திட்டம் என்ன எனக் கூறப்படவில்லை. என்றாலும் இந்திய அணிக்குப் பணியாற்றியது குறித்த நினைவுகளை புத்தகமாக எழுத அவர் முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

## கரவெட்டி பிரதேச செயலக பிரிவில்

# பொமேர்ஸ், கரணவாய் மத்தி அணிகள் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டன!

கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் கரணவாய் மத்தி அணியும், பெண்கள் பிரிவில் பொமேர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் சம்பியனாகத் தெரிவாகின.

இந்தப் போட்டிகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

பெண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் மனோகரா அணியை எதிர்த்து பொமேர்ஸ் அணி மோதியது. இதில் பொமேர்ஸ் அணியின் வீராங்கனை சுனேகா முதல் கோலைப் போட்டார். இதுவே வடமராட்சி பெண்கள் பிரிவில் முதன் முதல் அடிக்கப்பட்ட கோலாகவும் அமைந்து சுனேகாவுக்கு பெருமை சேர்த்தது. இரு அணிகளும் பெரிதும் போராடியபோதும் மேலதிக கோல் எதுவும் போடப்படாததால், மனோகரா அணியை 1;0 என்ற கோல் கணக்கில் பொமேர்ஸ் அணி தோற்கடித்தது.

ஆண்களுக்கான போட்டியில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகம் மோதிய போட்டியில் முதலில் டயமன்ஸ் அணி வீரன் தினேஸ் கோல் ஒன்றைப் போட்டார்.

அந்தவேளை கரணவாய் மத்தி அணியின் வீரன் தர்ஸனும், தொடர்ந்து அவ்வணி வீரன் அசோக் அடித்த கோலாலும் 2:1 என்ற அடிப்படையில் கரணவாய் மத்தி சம்பியனானது. (12)

# ஐ.சி.சி. தர வரிசையில் பாகிஸ்தான் முன்னேற்றம்!

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் மற்றும் டெஸ்ட் போட்டிகளின் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்ட தர வரிசைப்பட்டியலில் ஒருநாள் போட்டியில் இந்தியாவை வென்றதன்மூலம் பாகிஸ்தான் 110 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. இந்தியா 97 புள்ளிகளைப் பெற்று 8ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டது.

அவுஸ்ரேலியா 140 புள்ளிகள் பெற்று தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இலங்கை 117, நியூஸிலாந்து 116 புள்ளிகளுடன் 2, 3ஆவது இடத்தையும் தென்ஆபிரிக்கா 107, மேற்கிந்தியத் தீவுகள் 105, இங்கிலாந்து 103, புள்ளிகளுடன் முறையே 5, 6, 7ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டன. சிம்பாப்வே, கென்யா முறையே 9, 10ஆவது இடங்களிலும் உள்ளன.

டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலியா 132 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்றுள்ளது. அடுத்தபடியாக இங்கிலாந்து உள்ளது. இந்தியா 107 புள்ளிகளைப் பெற்று 3ஆவது இடத்திலுமுள்ளது.

டெஸ்ட் போட்டியில் துடுப்பாட்ட வரிசையில் கலிஸ் 881 புள்ளிகளுடன் முதலிடத்தையும், ராவிட் 872 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் உள்ளனர். இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான டெண்டுல்கர் 750 புள்ளிகளுடன் 11ஆவது இடத்தில் உள்ளார்.

அதேபோல் ஒருநாள் போட்டி துடுப்பாட்ட வரிசையில் அவுஸ்ரேலிய கப்டன் பொண்டிங் 759 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் வீரர் சர்வான் 741 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், டெண்டுல்கர் 13ஆவது இடத்துக்கும் தள்ளப்பட்டார்.

பந்து வீச்சில் அவுஸ்ரேலிய வீரர் மக்ரா முதலிடத்தில் உள்ளார். பாகிஸ்தான் வீரர் நவீட்-உல்-ஹசன் இந்தியாவுக்கு எதிரான தொடரில் 15 விக்கெட்டுகள் கைப்பற்றியதன் மூலம் 30ஆவது இடத்திலிருந்து 12 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். அதேபோல் துடுப்பாட்டத்தில் இன்சமாம் 11ஆவது இடத்துக்கும் அப்ரிடி 12 ஆவது இடத்துக்கும் முன்னேறியுள்ளனர்.




# மாணவர் மலர்

## மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2005


☼ தரப்பட்ட தகவல்களுடன் மிகவும் பொருந்தக்கூடிய வகையிலான உருவப் படத்தைக் கொண்ட விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

01. ஒரு வித்திலைத்தாவர இனத்தைச் சேர்ந்தது எல்லாப் பிரதேசங்களிலும் வளரக் கூடியது.




1 2 3 4

02. விதையற்ற காய், பால் உள்ள மரம் சமைத்தால் மிகவும் சுவையுடையது.



1 2 3 4

03. கப்பல் பயணத்திற்கு மிகவும் பயன்படக் கூடியது. கப்பலை நிறுத்தி வைப்பதற்கும் பயன்படுவது



1 2 3 4

☼ பொருத்தமான விடையை எழுதுக.

04. இன்று ஏப்ரல் மாதம் 15 திகதி சனிக்கிழமை எனின் அதே மாதத்தின் 29 ஆம் திகதி என்ன கிழமையாக இருக்கும்? ..............................

05. 10 தீப்பெட்டிகள் வாங்கும் பணத்தைக் கொண்டு 2 பென்சில்கள் வாங்கலாம். பென்சில் ஒன்றின் விலை 15.00 ரூபா எனின் ஒரு தீப்பெட்டியின் விலை என்ன?

..............................

06. திவ்யாவிடமுள்ள பணத்தைப் போன்று ஐந்து மடங்கு பணம் அஜித்தாவிடமுள்ளது. அஜித்தா வைத்திருக்கும் பணம் 200 ரூபா எனின், திவ்யாவிடமுள்ள பணம் எவ்வளவு?

..............................

07. கொடிகள் கட்டப்பட்ட தூண்கள் இரண்டிற்கிடையிலான தூரம் 3 மீற்றர் எனின், அத்தகைய 7 தூண்களுக்கிடையிலான தூரம் எத்தனை மீற்றர் ஆக இருக்கும்?

..............................

08. அஸ்வர்க் என்னைவிட உயரமானவன் ஆனால் கினை விடக் கட்டையானவன். கின் சஜித்குமாரை விடக் கட்டையானவன் எனின் மூவரிலும் உயரமானவன் யார்?


..............................

☼ A பகுதியில் தரப்பட்டுள்ளவற்றிற்கு விடையாக அமையக் கூடியதை B பகுதியில் இருந்து தெரிவு செய்து அவை குறித்து நிற்கும் இலக்கங்களை உரிய பெட்டியினுள் எழுதுக.

| A | | B |
|---|---|---|
| 09. வானத்தில் காணப்படும் நட்சத்திர வடிவம் | ☐ | I) பருந்து |
| 10. ஊனுண்ணும் பறவை | ☐ | ii) தூக்கணாங்குருவி |
| 11. அரசிற்கு உரித்தானது | ☐ | iii) பெருங்கரடி |
| 12. இயற்கை திரவ உணவு | ☐ | iv) மாநகரசபை |
| 13. புதுமையான படைப்புடன் கூடிய வீட்டை அமைப்பது | ☐ | v) தேன் |

☼ கீழே முதலில் தரப்பட்டுள்ள உருவப்படத்துடன் மிகவும் பொருந்தக்கூடிய வகையிலமைந்த உருவப் படத்தை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

14.



1 2 3

☼ பின்வரும் வாக்கியங்களிலே காணப்படும் காலத்தை உணர்த்தக்கூடிய சொல்லைத் தெரிவு செய்து கோடிடுவதுடன் அவை எந்தக் காலத்தை உணர்த்துகின்றன என்பதையும் உரிய இடைவெளிகளில் எழுதுக.

15. பிரியந்தன் பாடசாலைக்குச் சென்றான்.

..............................

16. மாரி காலத்தில் மழை பெய்யும்

..............................

17. அல்லும் பகலும் தண்ணீர் ஊற்றி தம்சத்வரி வளர்கின் றாள் தென்னையை

..............................

☼ கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இடவேண்டிய பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இடுக.

18. நிரோசினி பாடம் படித்தாள்.

..............................

19. சமபோஷாவைப் பயன்படுத்தி உருண்டை அல்வா முறுக்கு போன்றவற்றை அனுமா செய்தாள்.

..............................

20. நிசாபேர் பாடம் படித்தாயா என்று ஆசிரியர் கேட்டார்.

..............................



24. 2 Kg சீனியின் விலை யாது? ..............................

25. 2 கட்டு கீரையும், பாண் 1 இறாத்தலும் வாங்குவதற்கும் எவ்வளவு பணம் தேவை? ..............................

26. 1 1/2 லீற்றர் எண்ணெய் வாங்க எவ்வளவு பணம் தேவை? ..............................

27. 1 டசின் தீப்பெட்டியின் விலை யாது? ..............................

28. 1 Kg சீனியும், 1 Kg மாவும் வாங்கிக்கொண்டு கடைக் காரனிடம் 100 ரூபா கொடுத்தால் மிகுதிப் பணம் எவ்வளவு? ..............................

29. சீட்டையின் படி வாங்கிய முழுப் பொருட்களுக்கும் கொடுக்க வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு? ..............................

30. நான்கு றாத்தல் பாண் வாங்க எவ்வளவு பணம் தேவை? ..............................

31. 1 Kg கோதுமை மாவின் விலையை உரோம எண்ணில் எழுதுக? ..............................

32. 2 L எண்ணெய் வாங்கிக் கொண்டு ரூபா 200 ஐக் கடைக்காரனிடம் கொடுத்தால் மிகுதிப்பணம் எவ்வளவு? ..............................

33. 1/2 Kg சீனியும், 1 Kg மாவும், 3 தீப்பெட்டிகளும் வாங்க எவ்வளவு பணம் தேவை? ..............................

☼ சூரியன் மறைந்து செல்லும் நேரத்தில் காணக் கூடியவைகளைக் கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களிலிருந்து தெரிவு செய்து இடைவெளிகளில் எழுதுக?

- நட்சத்திரங்களை வானத்தில் பார்க்க முடியாது.
- பறவைகள் கூடுகளிலிருந்து பறந்து செல்லும்.
- வேலைகளை முடித்துவிட்டு மனிதர்கள் வீடு நோக்கி செல்வார்கள்.
- மேற்குத்திசையில் சூரியனை காணலாம்.
- இருள் மெல்ல மெல்ல வந்துகொண்டிருக்கும்.

34. ..............................
35. ..............................
36. ..............................

☼ சரியான விடையின் கீழ் கோடிடுக

37. கலப்பை செய்யும் வேலையைச் செய்யும் விலங்கு எது.
1) வெட்டுக்கிளி 2) மண்புழு 3) அட்டை

38. மீன்கள் எதனால் சுவாசிக்கின்றன
1) வாய் 2) செட்டை 3) பூக்களினால்

39. வயலில் அருவி வெட்டுவதற்குப் பயன்படும் ஆயுதம்
1) முள்ளுக்கத்தி 2) அரிவாள் 3) கத்தி

40. பெரிய நகரங்களிலே வீதியைக்கடப்பதற்கு அமைக்கப் பட்டிருப்பது
1) தொங்கு பாலம் 2) மேம்பாலம் 3) நடைபாதை

41. தையல் தைக்கும் போது பாதுகாப்புக்காகப் பயன்படும் பொருள்
1) சுவடு வரைசில்லு 2) திதாள் 3) கத்தரிக் கோல்

42. இலைகள் தடித்து தசைப்பற்றுள்ளதாக இருக்கும் தாவரம் எது
1) சவுக்கு 2) தென்னை 3) பிரண்டை

43. மண்ணில் வேர் ஊன்றி நீரில் மிதக்கும் இலைகொண்ட தாவரம்
1) ஐதரில்லா 2) பாசி 3) தாமரை


44. ஒட்டுண்ணித்தாவரம் ஒன்று
1) குருவிச்சை 2) மாதுளை 3) மாமரம்

45. தாவர உண்ணிகளில் ஒன்று
1) காகம் 2) கோழி 3) கிளி

46. பெரிய முட்டை இடும் பறவை
1) காகம் 2) கோழி 3) தீக்கோழி

☼ பின்வரும் படத்திலுள்ள பொருட்களின் காந்தத்தால் கவரப்படுவன, கவரப்படாதவை என வகைப் படுத்தி எழுதுக

47.



| காந்தத்தால் கவரப்படுபவை | காந்தத்தால் கவரப்படாதவை |
|---|---|
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |

'அ' பகுதிக்குப் பொருத்தமான விடையை 'ஆ' பகுதியில் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை நடுவேயுள்ள கூட்டுக்குள் எழுதுக.

| 'அ' | | 'ஆ' |
|---|---|---|
| 48. சந்திரனைக் காணமுடியாத நாள் | ☐ | நீர் |
| 49. பருவகாலங்களில் ஒன்று | ☐ | அமாவாசை |
| 50. சந்திரன் முழுமையாக தெரியும் நாள் | ☐ | புதன் |
| 51. சிவப்பு நிறமுள்ள கோள் | ☐ | இளவேனில் |
| 52. பூமியின் 75% மான பகுதி | ☐ | சூரியன் |
| 53. பூமிக்கு கிட்ட உள்ள நட்சத்திரம் | ☐ | வியாழன் |
| 54. கோள்களில் சிறியது | ☐ | பௌர்ணமி |

T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd
ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்


☼ கீழே தரப்பட்டுள்ள சம்பவத்துடன் பொருந்தக்கூடிய வாக்கியத் தொடரை அதனைத் தரப்பட்டுள்ள விடைக ளிலிருந்து தெரிவு செய்து, அதனை கோடிடுக.


21. பரீட்சையில் சித்தியடையாத தாரணி அதனை நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்.
i) துள்ளுகின்ற மாடு பொதி சுமப்பதைப் போன்று
ii) நிலத்தில் சிந்திய பாலை நினைத்து அழுவதைப் போன்று
iii) சாண் ஏற முழம் சறுக்குவதைப் போன்று


22. அம்மாக்கு எவ்வளவு புத்திமதி கூறியும் மது குடிக்கும் பழக்கத்தை அவனால் விட முடியவில்லை.
i) ஆற்றினுள் விறகு வெட்டிப் போட்டதைப் போன்று
ii) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாததைப் போன்று
iii) ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்பதைப் போன்று.

23. கலையரசன் என்பவன் சரியான கஞ்சன். அவனிடம் ஏதாவது பொருளைப் பெறுவது கடினமாகும்.
i) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும் என்பதைப் போன்று
ii) ஆற்றில் போட்டாலும் அளந்து போடு என்பதைப் போன்று
iii) ஆமையிடமிருந்து இறக்கை கேட்பதைப் போன்று


☼ கீழே தரப்பட்டுள்ள உருக்களில் நிறந் திட்டப்பட்டுள்ள பகுதியானது முழு உருவின் என்ன பின்னம் என்பதையறிந்து பொருத்தமான விடையின் கீழ் கோடிக.


24.  1. 5/6 2. 1/8 3. 7/8


25.  1. 15/24 2. 4/18 3. 7/24


26.  1. 5/8 2. 3/8 3. 1/2

☼ கீழே தரப்பட்டுள்ள நான்கு உருவப் படங்களிலும் ஒரு படமானது மற்றையவற்றிலிருந்து வேறுபட்டுள்ளது. அத்தகைய உருவைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

27. 
1 2 3 4

28. 
1 2 3 4

29. 
1 2 3 4

30. 
1 2 3 4


☼ கடதாசி அட்டை ஒன்று 8 சதுரங்களாகப் பிரிக்கப்பட்டு அவ் ஒவ்வொரு சதுரத்தினுள்ளும் திட்டப் பட்டிருந்த நிறங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து அதன் கீழமைந்துள்ள வினாக்களுக்குரிய பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நீலம் | வெள்ளை | நீலம் | மஞ்சள் | பச்சை | மஞ்சள் | பச்சை | நீலம் | மஞ்சள் | நீலம் |

31. 1/8 பகுதிக்கு நிறந் தீட்டப்பட்டுள்ள நிறம் யாது?
1. நீலம் 2. வெள்ளை 3. மஞ்சள்

32. மஞ்சள் நிறம் தீட்டப்பட்டுள்ள பின்னம்
1. 2/4 2. 1/8 3. 3/8

☼ கீழே ஒவ்வொரு வட்டத்தினுள்ளும் தரப்பட்டுள்ள இலக்கங்களில் ஒவ்வொரு இலக்கத்தைப் பயன்படுத்தி உருவாக்கக் கூடிய மிகப் பெரிய எண்ணையும் மிகச் சிறிய எண்ணையும் எழுதுக.




33. மிகப் பெரிய எண்
..............................................


34. மிகச் சிறிய எண்
..............................................

☼ சுருக்கமான விடை தருக.

35. 2843 எனும் இலக்கத்தில் 10 ஆம் தானத்திலுள்ள எண்ணின் பெறுமானம் என்ன?
..............................................

36. 6435 எனும் இலக்கத்தில் 100 இனால் குறிக்கப்படும் எண் பெறுமானத்திற்கும் ஒன்றினால் குறிக்கப்படும் எண் பெறுமானத்திற்கும் இடையிலான வித்தியாசம் யாது?
..............................................

37. கட்டமிட்ட அடைப்பிற்குள் உள்ள பெறுமானத்தைக் கொண்ட விடையின் கீழ்க் கோடிடுக.



1. 10-2 2. 10-7 3. 3+1

38. கலைவேந்தன் தரம் 5 இல் படிக்கும் ஓர் ஆண்பிள்ளை. அவன் அருகே வட்டத்திற்குள் இருக்கும் ஆடைக்குப் பதிலாக அணியக்கூடிய ஓர் ஆடை எது?


1 2 3

39. குற்றவாளிகளைப் பிடித்து வைக்கப்படும் இடம்
1. பாடசாலை 2. வைத்தியசாலை
3. சிறைச்சாலை 4. நீதிமன்றம்

40. கீழே உள்ள உருவில் உள்ள பிராணியை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவுசெய்க.
1. வீட்டில் வசிக்கும்.
தாவர உணவுகளை மட்டும் உண்ணும்.
2. நான்கு கால்களை உடையது.
இரண்டு கொம்புகள் உடையது.
3. வீட்டில் வசிக்கும்.
வாலை ஆட்டும்.



பின்வரும் பந்தியை வாசித்து, கீழ்வரும் வினாக்களுக்கு விடைதருக.

சோழ நாட்டிலே சடையப்பவள்ளல் என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் பெரும் பணக்காரர். நன்றாகப் படித்தவர். இரக்க மனமுடையவர். ஏழைகளுக்கு உதவி செய்பவர். தன்னிடம் வருபவர்களுக்கு இல்லையென்னாது கொடுக்கும் வள்ளன்மை உடையவர். இவரது பேரும் புகழும் நற்பெயரும் சோழ நாடுமுழுவதும் பரவியது. அப்பெரியாரிடம் ஒரு சிறுவன் வந்தான். அவன் பெயர் கம்பன். அவனுக்குத் தாய், தந்தையர் யாருமே இல்லா அனாதை. ஆனால் துடிப்புள்ள சிறுவனாகவும் கல்வியிலே நாட்டமுடையவனாகவும் காணப்பட்டான். இச்சிறுவனைக் கண்டதும் வள்ளலாருக்கு அவன்மேல் அதிகப்பற்று உண்டாயிற்று. அவனது ஆதரவற்ற நிலையைக்கண்டு அவனுக்கு ஆதரவளிக்கச் சிந்தை கொண்டார்.

கம்பன் நன்றாகப் படித்து வந்தார். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் கம்பன் கல்வியில் சிறந்து விளங்கினார். அத்துடன் நினைத்தவுடன் கவிபாடும் ஆற்றல் பெற்று விளங்கினான். கம்பனின் கவியாற்றலைக் கண்ட சோழ அரசன், அவனைத் தனது அரண்மனைப் புலவனாக்கினான்.

கம்பர், சோழ அரசனின் வேண்டுகோளுக்கிணங்கி இராமாயணத்தைத் தமிழில் பாடினார். இது பன்னீராயிரம் பாடல களை உடையது. கம்பர் இராமாயணத்தில் பல இடங்களில் தன்னை ஆதரித்த சடையப்பவள்ளலைப் புகழ்ந்து பாடியுள்ளார்.



1. சடையப்ப வள்ளல் எப்படிப்பட்டவர்?
..............................................
2. சடையப்ப வள்ளல் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
..............................................
3. தாய் தந்தை இல்லாதவரைக் குறிப்பிடும் சொல் எது?
..............................................
4. கம்பர் யாருடைய அரண்மனைப் புலவராக விளங்கினார்?
..............................................
5. இராமாயணத்தைத் தமிழில் பாடியவர் யார்?
..............................................
6. கவிபாடும் ஆற்றலை உடையவன் யார்?
..............................................
7. இருந்து வருபவர்களுக்கு இல்லையென்னாது கொடுப்பவன் யார்?
..............................................
8. இராமாயணத்தில் எத்தனை பாடல்கள் உண்டு?
..............................................
9. பந்தியிலுள்ள வினைச் சொற்கள் இரண்டு தருக?
1. .................... 2. ....................

10. ஒத்தசொல் இரண்டு தருக?
1) கவி : .................... 2) வள்ளல் :- ....................

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

11. மருந்துனீர், மருந்துநீர், மறுத்து நீர்
12. கைநூல், கைனூல், கைந்நூல்
13. தீவட்டி, தீவர்த்தி, தீவட்த்தி
14. உச்சவம், உட்சவம், உற்சவம்
15. கோடரி, கோடறி, கோடாலி

பின்வரும் தமிழ்ச்சொற்களை ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆங்கில மொழியில் எழுதுக.

16. கிளி ....................
17. யானை ....................
18. வெண்கட்டி ....................
19. திராட்சைப்பழம் ....................
20. காவலாளி ....................

பின்வரும் தமிழ்ச்சொற்களை சிங்கள எழுத்துக்களைப் பயன்படுத்தி சிங்கள மொழியில் எழுதுக.

21. தம்பி :- .................... 22. ஒன்பது :- ....................
23. கத்தி :- .................... 24. ஆசிரியை :- ....................

கீழே தரப்பட்டுள்ள விலைப்பட்டியலைப் பயன்படுத்தி அதன் கீழ் அமைந்துள்ள வினாக்களுக்கு விடைதருக.

| பொருட்கள் | அளவு | (விலை)ரூபா சதம் |
|---|---|---|
| கோதுமை | மா 1Kg | 24.00 |
| பாண் | 1 றாத்தல் | 18.00 |
| சீனி | 1/2 Kg | 32.00 |
| கீரை | 1 கட்டு | 12.00 |
| தீப்பெட்டி | 1/2 டசின் | 18.00 |
| எண்ணெய் | 1 L | 75.00 |

# சிறு பிரச்சினைகளைத் தீர்க்க பிரதேச ரீதியாக விசேட குழுக்கள்!

## மத்தியஸ்த ஆணைக்குழு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கிராமங்கள் தோறும் ஏற்படுகின்ற சிறுசிறு பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு மத்தியஸ்த சபை ஆணைக்குழுவால் முதற்கட்டமாக ஐந்து பிரதேசங்கள் தெரிவுசெய்யப் பட்டு, விசேட குழு ஒன்று அமைக்கப் படவுள்ளது.

மத்தியஸ்த சபை ஆணைக்குழு வின் தலைவர் ஓய்வுபெற்ற மேல் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் டி. விஜேவிக்கிரம - நேற்றுமுன்தினம் யாழ்.குடாநாட்டுக்கு வருகைதந்து - அரசாங்க அதிபரைச் சந்தித்த பின்னர், பத்திரிகையாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

சிறு சிறு சம்பவங்களுக்கும் இன்று மக்கள் நீதிமன்றத்துக்குச் செல்கின்ற போது - அவர்களுக்கான தீர்வு கிடைக்க பல மாதகாலம் எடுக்கிறது. இவ்வாறான சிறுசிறு பிரச்சினைகளை உடனே தீர்க்கமுடியும்.

இதற்கமைய ஊர்காவற்துறை, வேலணை, நல்லூர், சங்கானை, யாழ்ப்பாணம் போன்ற பிரதேச செயலகங்களில், மத்தியஸ்தசபை ஆணைக் குழு அலுவலகங்கள் அமைக்கப்பட வுள்ளன. இவ்வாறான நடவடிக்கை மூலம் நீதிமன்றங்களில் அதிகரிக்கும் சிறு சிறு வழக்குகளின் எண்ணிக்கை யைக் குறைக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# குழாய்வழி குடிநீர் உவர்த்தன்மை; கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசத்தில் குளாய் மூலம் விநியோகம் செய்யப்படும் குடிநீர் உவர்த்தன்மையடைந்து - வருவதால் அதன் பாவனையைக் கட்டுப்படுத்தும் வகையில் பிரதேச சபையால் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

மக்கள் செறிந்துவாழும் இடங் களில் அமைக்கப்பட்டுள்ள நீர்த் தாங்கிகளிலிருந்து நீரைப் பெறும் குடும்பங்கள் ஒவ்வொன்றும், அந்தத் தாங்கிகளில் நீர்பெறும் அங்கத்தவ ராக நூறு ரூபா பணம் செலுத்தி சேர்த் துக்கொள்வதுடன், குறிப்பிட்ட நீர்த் தாங்கிகளில் மட்டுமே அங்கத்தவர் நீரைப் பெறமுடியும் எனவும் பொது அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குடிநீரின் தேவை யற்ற பாவனையைக் குறைக்கும் நட வடிக்கையாக 20 லீற்றர் குடிநீருக்கு 50 சதம் கட்டணமாகவும் அறவிடப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

# மானிப்பாய் லியோ கழகத்தினால் பிளாஸ்ரிக் கதிரைகள் அன்பளிப்பு

(சுதுமலை)

மானிப்பாய் பரிஷ் லியோ கழ கத்தினர் - செவிப்புலன் வலுவற் றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் உபயோகத்துக்கென சுமார் 11 ஆயி ரம் ரூபா பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகளை அன்பளிப்பாக வழங்கி யுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை செவிப் புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் - லியோக் கழகத் தலை வர் விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் -

லியோ கழக ஆலோசகர் லயன் சி.பாலகிருஷ்ணன், நிறுவனத் தலை வர் க.சுரேந்திரநாதனிடம் கதிரை களைக் கையளித்தார். (91)

# சுனாமி அனர்த்தத்தை அடுத்து கடலுணவுகளுக்கு தட்டுப்பாடு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசத்தில் தற்போது கடலுணவுகளுக்குத் தட்டுப்பாடு நிலவிவருகிறது. கடந்த வருட இறுதி யில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் பின்னர்தான் இந்த நிலை ஏற்பட் டுள்ளதாகக் கடற்தொழிலாளர்கள் கவலை தெரிவித்தனர்.

வழமையாக வருடாந்தம் இந்தக் காலப்பகுதியில் மீன்கள் அதிகம் பிடிக் கப்படுவதுடன், வேறு இடங்களுக்கு அனுப்பப்படுவதால் இந்த வருடம் உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய் யக்கூடிய அளவுக்குக்கூட மீன்கள் பிடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள் ளது.

அன்றாடம் மீன்பிடித் தொழிலை நம்பிவாழும் மக்களும், பெரும் முத லீட்டை விட்டு மீன்பிடி உபகரணங் களைக் கொள்வனவு செய்பவர் களும் பெரும் பொருளாதார நெருக் கடிக்குள்ளாகிவருகின்றமை குறிப் பிடத்தக்கது. (113)

# சைவப் புலவர் சங்க பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு பரிசளிப்பு!

(சுதுமலை)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்திய சைவப் புலவர் பரீட்சை, இளம் சைவப்புலவர் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த வர்களுக்கான பட்டமளிப்பும் - சான் றிதழ் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை நடை பெறவுள்ளது.

வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெற வுள்ள இந்த நிகழ்வில் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் பிரதம விருந் தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை, அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்திய புராண படனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் - சான்றிதழ்களும் வழங்கப்படவுள் ளன. (91)

# பிரியாவிடை வைபவம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத் தில் கடமையாற்றி, ஓய்வுபெற்றுச் சென்றோர் மற்றும் பதவி உயர்வு கிடைத்து இடமாற்றம் பெற்றுச்சென் றோருக்கான பிரியாவிடை வைப வ - இன்று காலை 11 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத் தலைவர் எம்.பால சிங்கம் தலைமையில் நடைபெற வுள்ள இந்தப் பிரியாவிடை வைபவத் தில், 6 உத்தியோகத்தர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (44)

# 'நிலவருகே மரணம்'நாடகம் கைலாசபதி கலையரங்கில்!

(சுதுமலை)

'நிலவருகே மரணம்' (சந்த லங்க மரணய) என்ற சிங்கள நாடகம் எதிர் வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கௌசல்ய பெர்னாண்டோவின் நெறியாள்கையில் உருவான இந்த நாடகம் - 2005 ஆம் ஆண்டுக்கான அரச நாடக விழாவில் சிறந்த நாடக மாகத் தெரிவு செய்யப்பட்டதுடன், எட்டு உயர் விருதுகள் பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது.

துன்பியலை எடுத்தாண்டு உணர் வின் உச்சத்துக்கு உள்ளத்தை உருக்கும் இந்த நாடகம், இலவசக் காட்சியாக ஆற்றுகை செய்யப்படவுள் ளது. (91)

# இலங்கைக்கு உதவிகளை வழங்குவதே நோர்வே அரசின் முக்கிய நோக்கம்!

## தூதரக ஆலோசகர் ரோர்கு பறூட்




(யாழ்ப்பாணம்)

நோர்வே அரசாங்கம் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாகப் பிரச் சினைகளை எதிர்நோக்கியுள்ள இலங் கைக்கு உதவி வழங்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள் ளது என நோர்வே தூதரக ஆலோ சகர் ரோர்கு பறூட் தெரிவித்தார்.

யாழ்.பிரதான வீதியில் - யாழ். மாநகர சபையால் அமைக்கப்பட்ட சுற்றுச்சூழல் முகாமைத்துவப் பிரிவு அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இந் தத் திறப்புவிழா நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

இலங்கையில் நீடித்த சமாதா னத்தை உருவாக்குவதற்கு நோர்வே அரசு முயற்சியெடுத்து செயலாற்றி வருகிறது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நொராட் நிறு வனத்தின்மூலம் நிதியுதவி செய்து பாதிக்கப்பட்ட இடங்களில் மீள்கட்டு மானப் பணிகளுக்கு உதவிசெய்து வருகின்றோம். தொடர்ந்து உதவி களை வழங்குவோம்.

இந்த நிகழ்வில் பங்குபற்றி உரை நிகழ்த்துவதில் மிக மகிழ்ச்சி அடைவ தாகவும் அவர் மேலும் தெரிவித் தார்.

# 'வெளிச்சம்' இதழ் வெளியாகியது!

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை பண் பாட்டுக் கழகத்தின் கலை, இலக்கிய, சமூக இதழான வெளிச்சத்தின் 90 ஆவது இதழ் வெளிவந்துவிட்டது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன் -மாலிகா, புதுவை இரத்தினதுரை, த.ஜெய சீலன், கணனிக்கவி , பாட்டுக்குயில், கோ.சி.கலைக்கதிர், ந.தகையன், யோ. கர்ணன், இளைய அப்துல்லாஹ் ஆகி யோரின் கவிதைகளும் -

செங்கை ஆழியான், ஞானரதன் ஆகியோரின் தொடர் கட்டுரைகளும்- யதீந்திரா, பொன்.பூலோகசிங்கம், மலைமகள், அன்ரனி ஆகியோரின் கட்டுரைகளும் இடம்பெறுகின்றன.

அத்துடன் சாந்தன், ஆதிலட்சுமி சிவகுமார், உடுவில் அரவிந்தன் ஆகி யோரின் சிறுகதைகளும், கவிஞர் சு. வில்வரத்தினத்துடனான நேர்காண லும் - நாட்டுப்பற்றாளர் வே.க.ஏரம்பு ஆசிரியர், நாட்டுப்பற்றார் விழிசிட்டி க.சிவராஜா, அரங்கக் கலைஞன் நா. சுந்தரலிங்கம் ஆகியோருக்கான அஞ் சலிகளும் - குறிப்புகள், புதிய வரவு கள் இன்னும் பலவும் இடம்பெற்றி ருக்கின்றன.

அத்துடன் சுனாமி அனர்த்தத்தின் புகைப்படச் சுவடுகளையும் தாங்கி இந்த இதழ் வெளிவந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

# நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

றீடோ நிறுவனத்தால் கோரப்பட்டி ருந்த மொழிபெயர்ப்பாளர், ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பித்தோருக் கான நேர்முகப் பரீட்சை - எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு குளப்பிட்டி வீதி, ஆனைக் கோட்டையிலுள்ள றீடோவின் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள் ளது.

இந்தப் பதவிகளுக்கு விண்ணப் பித்த அனைவரையும் அன்றைய தினம் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட் சைக்குத் தோற்றுமாறு யாழ்.மாவட்ட இணைப்பாளர் தி.ஜெயக்குமார் அறி வித்துள்ளார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஒன்பதாவது அகவையில்



பெயர் : வி.கோபிகா
முகவரி : யாழ்ப்பாணம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :-----------------------

முகவரி :-----------------------

பிறந்த ஆண்டு:-----------------------




கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

# உதவித்தொகை பெறுவோரின் விபரங்கள் மீளாய்வு!

(சுதுமலை)

மானிப்பாய் தெற்கு கட்டுடை ஜே/ 140 கிராம அலுவலர் பிரிவில் - பொது சன மாதாந்த உதவித்தொகை பெறு வோர் தொடர்பான மீளாய்வு நாளை இடம்பெறவுள்ளது.

வலிகாமம் தென்மேற்கு சமுக சேவை உத்தியோகத்தரால் -கட்டுடை கிராம அலுவலர் பணிமனையில் இது நடத்தப்படவுள்ளது. சம்பந் தப்பட்டவர்கள் மாதாந்த உதவித் தொகை அட்டையையும், குடும்ப அட் டையையும் சமர்ப்பிக்குமாறு கேட் டுள்ளனர். (91)



டொமினிக் ஜீவா தலைமையில் கொழும்பில் நடைபெற்ற 'சுனாமி' வெளியீட்டு விழாவில் - எழுத்தாளர் முத்துமீரான் உரை யாற்றுவதையும், ஆசிரியர்.க.குணராசா, பூபாலசிங்கம் புத்தக சாலை அதிபர் ஸ்ரீதரசிங் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

# அன்னை பூபதியின் நினைவுதின நிகழ்வு
# கிளிநொச்சியில் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அன்னை பூபதியின் 17 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் எழுச்சியுடன் நடைபெற்றன.

கிளிநொச்சி நகரின் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் உட்பட சகல இடங்களும் மஞ்சள், சிவப்பு கொடிகள் கட்டப்பட்டு, அன்னை பூபதியை நினைவு கூரும் வகையில் எழுச்சிக் கோலம் பூண்டிருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பணிமனைகள், பாசறைகள் என்பவற்றிலும் மஞ்சள், சிவப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளதுடன், ஒலிபெருக்கிகள் மூலம் தாயகப் பாடல்கள் ஒலித்த வண்ணம் உள்ளன.

அன்னை பூபதியை நினைவு கூரும் அடையாள உண்ணா நோன்பு நிகழ்வுகள் - கிளிநொச்சி மாவட்டத்தின் பல இடங்களிலும் நடைபெற்றன.

கிளிநொச்சியில் தமிழீழ அரசியற்துறை நடுவப் பணியகத்தில் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு நடைபெற்ற நிகழ்வில் - பொதுச்சுடரை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஐக்கிய நாடுகள் மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் மு.பாவரசன் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடக ஒருங்கிணைப்பு பிரிவுப் பொறுப்பாளர் நரேஸ் ஏற்றிவைத்தார்.

அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கான மலர்மாலையை தமிழீழ அரசியற்துறையின் நிர்வாகப் பொறுப்பாளர் மணியண்ணா அணிவிக்க, தொடர்ந்து மலர் வணக்கம் நடைபெற்றது.

இதேவேளை கிளிநொச்சியின் கண்டாவளை, வட்டக்கச்சி, பரந்தன், பூநகரி, உருத்திரபுரம், ஜெயபுரம், முழங்காவில், அக்கராயன், வன்னேரிக்குளம், கோணாவில், திருமுறிகண்டி எனப் பல பகுதிகளிலும் அடையாள உண்ணா நோன்புகள் நடைபெற்றன.

கிளிநொச்சி - உருத்திரபுரம் தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் உருத்திரபுரம் கூழாவடியில் மிகவும் உணர்ச்சி பூர்வமாக அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

உருத்திரபுரம் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலர் நிக்லஸின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் பொதுச்சுடரை உருத்திரபுரம் வலயப் பொறுப்பாளர் ஜெகன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை கரைச்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சிறி ஏற்றிவைத்தார். அன்னை பூபதியின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரை உருத்திரபுரம் கிராமசேவகர் வைத்தீஸ்வரமூர்த்தி ஏற்றிவைக்க, திருவுருவப் படத்துக்கான மலர் மாலையை உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக செயலாளர் கலாதரன் அணிவித்தார்.




## நினைவுக்கல் திரைநீக்கம்

1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி - தமிழீழ கடற்பரப்பில் நடந்த படகு விபத்தொன்றின் போது வீரச்சாவடைந்த கடற்புலி கப்டன் தமிழிசை (தெய்வேந்திரன் தேவசுஜிதா) என்ற போராளியின் நினைவுக்கல் - நேற்று முன்தினம் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப் பட்டது.

திருவுருவப்படம் அவரது தற்காலிக இடமான இராநாதபுரத்தில் வைக்கப்பட்டு, நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணிக்கு வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் வீரவணக்க நிகழ்வு நடைபெற்றது.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**ஏப்ரல் - 20**

1815 : ஐரோப்பியப் போரில் அமெரிக்கா நடுநிலைமை வகிக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி வுட்ரோ வில்சன் அறிவித்தார்.

1917 : துருக்கி - அமெரிக்காவுடன் இராஜதந்திர உறவைத் துண்டித்துக் கொண்டது.

1918 : முதலாம் உலகப் போரில் ஜேர்மனி 200 தொன் நச்சு வாயுவை தனது எதிரிகளுக்கு எதிரான யுத்தத்தில் பயன்படுத்தியது.

1919 : செஞ்சேனையின் முதலாவது படையணி உக்ரைன் படைகளிடம் சரணடைந்தது.

1920 : ஏழாவது ஒலிம்பிக் போட்டி பெல்ஜியத்தில் ஆண்ட்வெர்ப் நகரில் ஆரம்பமாகியது. 29 நாடுகளைச் சேர்ந்த 2692 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர். அமெரிக்காவைச் சேர்ந்த 14 வயதுடைய அய்லீன் றிக்கின் தாவிக்குதித்து நீந்தும் போட்டியில் தங்கம் வென்றார்.

1945 : சோவியத் ரஷ்யாவினது படையணி பேர்லின் நகருக்குள் நுழைந்தன.

1948 : தனது பயணப்பாதையை விட்டு விலகி, சோவியத் ரஷ்யாவின் வான் எல்லைக்குள் பறந்து சென்ற தென் கொரியாவின் பயணிகள் விமானம் மர்மான்ஸ்க் அருகே ரஷ்யப் போர் விமானங்களால் பலவந்தமாகத் தரையிறக்கப்பட்டது.

1983 : விளாடிமிர் டிட்டால், ஜென்னடி ஸ்ட்ரெக்லாவ், அலெக்ஸாண்டர் செறிப்ராங் ஆகிய மூன்று விண்வெளி வீரர்களுடன் சோயுஸ் - டி 8 என்ற விண்கலம் விண்ணோக்கி ஏவப்பட்டது.

1994 : பாலஸ்தீனர்களுக்கு சிவிலியன் அரசு அதிகாரங்களை வழங்குவதான இஸ்ரேல் - பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு இடையிலான ஒப்பந்தம் கெய்ரோவில் கைச்சாத்திடப்பட்டது.

தொகுப்பு - சந்துரு

# திலீபன் மருத்துவமனையின் மூன்றாம் ஆண்டு நிறைவுநாள்

(முல்லைத்தீவு)

துணுக்காய் பிரதேசத்தின் ஐயன் குளம் பகுதியிலுள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவமனையின் மூன்றாம் ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்றது.

இதற்கான ஏற்பாட்டை தியாக தீபம் திலீபன் மருத்துவமனையின் அபிவிருத்திக் குழுவினர் மேற்கொண்டனர்.

அத்துடன் தியாக தீபம் அன்னை பூபதியின் நினைவு தினம் ஐயன் குளம் பாடசாலை மண்டபத்தில் உணர்வு பூர்வமாக நடைபெற்றது என, தியாக தீபம் திலீபன் மருத்துவமனையின் அபிவிருத்தி குழுவினர் தெரிவித்தனர்.

# முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள், தளபாடங்கள் வழங்கல்

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அபிவிருத்திக்கு சமூக பொருளாதார சூழல் அபிவிருத்தி நிறுவனம் சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களையும், தளபாடங்களையும் வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த வியாழக்கிழமை காலை 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில், முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் ஜெயகுலராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை முல்லைத்தீவு மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் ஜெயகுலராஜா நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வின் நன்றியுரையை முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி ஜி.சி.தர்மேந்திரா நிகழ்த்தினார்.

இதில் முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறை பொறுப்பாளர் ம.ரங்கன், சமூகப் பொருளாதார சூழல் அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர்கள், முல்லைத்தீவுப் பிரதேச வர்த்தகப் பிரதிநிதிகள், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியர்கள், பணியாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



இதுவரை புனரமைக்கப்படாது இருந்த வட்டக்கச்சி மாணிக்கப் பிள்ளையார் வீதியை, வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழக அனுசரணையுடன் அந்தப் பகுதி மக்கள் புனரமைப்புச் செய்வதைப் படத்தில் காணலாம்.

படம் - வே.சீலன்

# அன்னை பூபதி நினைவுதினத்தை முன்னிட்டு முல்லைத்தீவில் சிந்துநடை கூத்துப் போட்டி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறையினரின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையால் அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, அவரின் வரலாற்றைச் சித்தரிக்கும் சிந்து நடை கூத்துப் போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 8 மணிக்கு புதுக்குடியிருப்பு சுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை நுண்கலைக்கல்லூரி பணிப்பாளர் கண்ணதாசன் ஏற்றிவைத்தார். அன்னை பூபதியின் உருவப்படத்துக்கான ஈகச்சுடரை பொய்கை செல்லத்துரை ஏற்றிவைத்தார். மலர் மாலையை புதுக்குடியிருப்பு கிராம அலுவலர் சிவராசா அணிவித்தார்.

இந்த நிகழ்வின் நினைவுரையை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட தமிழ்ச் சங்கத் தலைவர் க.சரவணபவன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை முல்லைத்தீவு அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து சிந்து நடைக்கூத்து இடம் பெற்றது. இதன் நெறியாளர்கள் பொன்னாடைபோர்த்தி கௌரவிக்கப் பட்டனர்.

இந்தப் போட்டியில் முதலாம் இடத்தை முள்ளியவளை பிரதேச பிரிவும், இரண்டாம் இடத்தை மல்லாவிப் பிரதேச பிரிவும், மூன்றாம் இடத்தை மாங்குளம் பிரிவும் பெற்றுக் கொண்டன.

இந்த நிகழ்வில் சிறந்த நடிகராக மல்லாவி நாட்டுக் கூத்தின் நெறியாளர் இராசகுலம் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

இறுதியாக தெரிவு செய்யப்பட்ட கூத்துக்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. முதலாம் இடத்தைப் பெற்ற பிரிவுக்கு தமிழீழ அரசியற்துறை நிதிப் பொறுப்பாளர் ஆதவன் பரிசில்களை வழங்கினார்.

(வெ)

## அடிப்படை வசதியற்ற நிலையில் முன்பள்ளி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - இரணைமாதா நகர் முன்பள்ளி அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகிறது.

முழங்காவில் பிரதேசத்துக்குட்பட்ட இந்த முன்பள்ளியில் 100 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கல்விபயின்று வருகின்ற நிலையில், கற்றல் உபகரணங்கள், தளபாடவசதிகள் இன்றி பெரும்சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

## கடனுக்குப் பதிலாக 100 மூடை நெல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஊரியான் கிராமத்துக்கு 2004 ஆம் ஆண்டு நியாப் திட்டத்தால் ஜீவனோபாய கடன் திட்டத்தின் கீழ் - 7 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பணம் ஊரியான் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு வழங்கப்பட்டது.

இந்தப் பணத்தில் 67 பயனாளிகள் கடனைப் பெற்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளனர். தற்போது, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் கடன் பெற்ற ஒவ்வொருவரும் பெற்ற கடனுக்காக, 100 இற்கு மேற்பட்ட நெல் மூடைகளை வழங்கியுள்ளனர்.

# கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தில் அரும்பொருள் காப்புமையம் திறப்பு!

1993 ஆம் ஆண்டு பூநகரியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தவளைப் பாய்ச்சல் நடவடிக்கை மூலம் தாக்கியழிக்கப்பட்ட போர்த் தாங்கியை மையப்படுத்தி, அரும் பொருள் காப்புமையம் விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்கை தமிழீழ அரசியற்துறையின் அரும்பொருள் காப்புமையம் மேற்கொண்டுவருகிறது.

பூநகரியில் பழமைவாய்ந்த கோட்டையில் இதர பொருட்களும் காணப்படும் சூழலில் இந்த அரும்பொருள் காப்புமையம் திறந்துவைக்கப்படுவது சிறப்பம்சம் ஆகும்.

1991 ஆம் ஆண்டு பூநகரியை வலம்புரி படைநடவடிக்கை மூலம் ஆக்கிரமித்த இராணுவத்தினர் - பல தொன்மை வாய்ந்த பொருட்களை பூநகரியில் அழித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தன்னிறைவான கிராமம் அமைக்க தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முயற்சி!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு பகுதிகளில் தன்னிறைவான கிராமம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு பகுதிகளில் வாழும் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, இந்தத் தன்னிறைவான கிராமங்களை அமைப்பதற்கான முயற்சியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளனர்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து, அதற்கேற்ப இந்தக்கிராமங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இந்த நிகழ்வு வடமராட்சி கிழக்கு தமிழர்புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் வி.கவிச்செல்வன் தலைமையில் இடம்பெற்றது.

தமிழர்புனர்வாழ்வுக்கழக நிர்வாக உத்தியோகத்தர், பொறியியலாளர், பிரதேச கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் ஒன்று கூடி, இதன் முதற்கட்டமாக புனித நகர் எனும் கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஓர் தேவைக் கணிப்பீட்டை மேற்கொண்டனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*மேல்இருந்தும் மேல்அல்லார் மேல்அல்லர் கீழ்இருந்தும் கீழ்அல்லாார் கீழ்அல் லவர்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## மீண்டும் தேர்தலை நோக்கி தென்னிலங்கை அரசியல் நகர்வுகள்

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிக்காக பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதில் உடன்பாடு ஒன்று எட்டப்படுகின்றதோ இல்லையோ, சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதற்கு வசதியாக இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றதோ இல்லையோ - நாட்டில் மற்றொரு பொதுத்தேர்தலுக்கும், ஜனாதிபதித் தேர்தலுக்குமான முன்னேற்பாட்டு முயற்சிகளும், அதற்கான மூலோபாயங்களை வகுத்தல் மற்றும் வியூகங்களை அமைத்தல், கூட்டணிகளை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகள் வெளிப்படையாகவும், திரைமறைவு செயற்பாடுகள் மூலமும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தென்னிலங்கை செய்திகள் தெரிவித்து வருகின்றன.

பொதுக்கட்டமைப்பு, இடைக்கால நிர்வாகம், சமாதான முயற்சிகள் மற்றும் தனியார் மயமாக்கல் உட்பட பல்வேறு விடயங்களில் ஜனாதிபதியுடன் முரண்பட்டு மோதிக்கொண்டிருக்கும் ஜே.வி.பியினர், அரசுக்குள் வலுவான ஒரு சக்தியாக தம்மை நிலைநிறுத்திக்கொண்டு, தம் விருப்பத்துக்கு மாறாக எந்த ஒரு தேசிய நலன் குறித்த விடயத்திலும் ஆக்கபூர்வமான செயற்பாடு எதனையும் மேற்கொள்ளவிடாது தடுத்துக்கொண்டே இருப்பதுடன் - ஜனாதிபதியைக் கடுமையாக மட்டுமல்லாது கீழ்த்தரமாகவும் விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதன் காரணமாக ஜனாதிபதிக்கும் - ஜே.வி.பிக்கும் இடையேயான பனிப்போர் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே போவதுடன் - இருவருக்கும் இடையே ஒட்டவும் - வெட்டவும் முடியாத சந்தர்ப்பவாத உறவே தற்போது ஆட்சியைத் தக்கவைக்க உதவி வருகின்றதெனலாம்.

இந்தச் சூழலில், ஜனாதிபதி மக்களிடம் தமது செல்வாக்கை வளர்ப்பதற்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லையென்றே கூறவேண்டும்.

அரசுக்குள்ளான தனது வலுவான நிலையைப் பயன்படுத்தி பல்வேறு சந்தர்ப்பங்களில் - அதுவும் இந்த ஓராண்டு காலப்பகுதிக்குள்ளேயே ஜே.வி.பியினர், ஜனாதிபதியை தமது விருப்பத்தின்படி 'மிரட்டி' செயற்படவைத்து தமது பலத்தையும், ஜனாதிபதியின் பலவீனத்தையும் வெளிப்படுத்தியுள்ளதுடன் - தமது ஆரம்பகால இடதுசாரிக் கொள்கைகளைத் தூக்கி வீசிவிட்டு பேரினவாத சித்தாந்தத்தை இறுகப்பற்றியபடி தமது அரசியல் நகர்வுகளை முன்னெடுக்கத் தொடங்கியதில் தென்னிலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் கதி கலங்கிப் போயுள்ளதும் நிஜமே!

பொதுக்கட்டமைப்பு, இடைக்கால நிர்வாகம், சமாதான முயற்சிகள் மற்றும் தனியார் மயமாக்கல் போன்ற விடயங்களில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதன் மூலம் - தாங்களே சிங்கள தேசத்தின், சிங்கள மக்களின் எதிர்கால பாதுகாவலர்கள் - ரட்சகர்கள் என்ற கருத்துருவாக்க வடிவத்தை தென்பகுதி மக்களிடையே பரப்பிவரும் ஜே.வி.பியினர், அரசுக்குள் ஜனாதிபதியின் செல்வாக்கை உடைக்கவும், மங்கள சமரவீர, அனுரா பண்டாரநாயக்க போன்றவர்களை தம்வசமாக்கி, பொதுஜன ஐக்கிய முன்னணியை குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தி அடுத்த தேர்தலுக்குள் புதிய கூட்டணியொன்றை ஏற்படுத்தக் கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஜே.வி.பியின் இந்த முயற்சியின் பின்னணியில் அயலக மேலாதிக்க சக்தியின் அரசியல் யுக்தியும் இருப்பதாக தென்பகுதி அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

ஜனாதிபதியினதும், எதிர்க்கட்சியினதும் நகர்வுகள் யாவும் அமெரிக்கா சார்ந்த போக்கிலேயே செல்வதாக சந்தேகப்படும் அயலக சக்தி, ஜே.வி.பியுடன் மிக நெருக்கமான - வெளிப்படையான அதேசமயம் சில இரகசிய உடன்பாடுகளுடனான உறவுகளைப் பேணத் தொடங்கியுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இதுவே இப்போது ஜனாதிபதிக்குத் திருகுவலியாகியுள்ள விடயமாகும்.


இதேவேளை, ஹெல உறுமய பிக்குகள் மஹிந்த ராஜபக்ஷவை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக்க வேண்டுமென்று பௌத்த உயர் பீடங்களூடாக ஜனாபதிக்கு அழுத்தம் கொடுக்க முயன்று வருவதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில் ஜனாதிபதிக்கு பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கான சர்வதேச அழுத்தமும் அதிகரித்து வருவதால் அது தொடர்பாக விரைவில் முடிவெடுக்கவேண்டிய கட்டாயமும் ஏற்பட்டுள்ளது.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளும் தந்திரோபாயத்தைக் கடைப்பிடிக்கும் ரணில் தலைமையிலான எதிர்க்கட்சியினர் ஆளும் கூட்டணி உடைவுறும் நாளுக்காகக் காத்திருப்பதாகத் தெரிகிறது.

எப்படியாயினும் இந்த அரசின் ஆட்சிக்காலமும், ஜனாதிபதியின் அரசியல் எதிர்காலமும் நூலிழையில் தொங்கிக் கொண்டிருப்பதாகவே கூறமுடியும். பல வழிகளிலும் குழப்படைந்திருக்கும் ஜனாதிபதியின் ராஜதந்திரம் ஆட்சியைக் கலைத்து புதிய தேர்தலுக்கான அறிவிப்பை விடுக்கும் நோக்கிலேயே நகரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இல்லையேல், தொடரும் இந்த ஆட்சி தனக்கு எதரணியொன்றை வலுவான உருவாக்கும் வாய்ப்பினை ஜே.வி.பிக்கு தந்துவிடும் என்று அவர் அஞ்சுவதாகவே தெரிகிறது.

தேர்தல் என்று வந்துவிட்டால் சமாதானம் தொடர்பான அனைத்து அழுத்தங்களையும் கொஞ்சக்காலம் கிடப்பில் போட்டுவிடலாமல்லவா?

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# அச்சமற்ற வாழ்க்கைக்கு மக்கள் யாரைத்தேடுகிறார்கள்?

ஒருவர் ஒரு யோசனையைச் சொல்வார். அது நல்லதோ கெட்டதோ என்று ஆராயாமலே இவர் சொல்லி விட்டார் என்பதற்காக மற்றவர் எதிர்ப்பார். இதே போல்தான் அவர் ஒரு திட்டம் கொண்டு வந்தால், மற்றவர் எதிர்ப்பார். இதுதான் நமது நாட்டில் கடந்த ஐம்பதாண்டு காலத்துக்கு மேலாக நடந்து வரும் வரலாறு.

இப்படித்தான் இனப்பிரச்சினை ஜனநாயக ரீதியில் வாதாடிப் பார்த்து, சாத்வீகப போராட்டம் நடத்திப் பார்த்து இன்று ஆயுதப் போராட்டத்தில் தாயக நிலத்தில் முக்கால் பாகம் விடுவிக்கப்பட்ட பின்னரும் தீர்வு காணப்படாமலிருந்து வருகிறது. இதேவழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்று என்முன்னே வந்தமர்ந்த பரமசிவம் சொன்னார்.

அப்படியானால் இதற்கு என்ன வழி காணலாம் என்று நீர் நினைக்கின்றீர் ? என்றேன்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆட்சிபீடத்தில் இருக்கும் கட்சி முதலில் தன்னுடன் கூட்டுச் சேர்ந்து, ஆட்சிபீடத்திலுள்ள இதர கட்சிகளுடன் பேசி, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஒரு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். இத்திட்டத்தை ஆட்சி பீடத்திலுள்ள கூட்டுக்கட்சிகள் அனைத்தும் விவாதித்தும் பரிசீலித்தும் அங்கீகரிக்கவேண்டும் என்று பரமசிவம் சொல்லிக்கொண்டிருந்தார்.

நான் இடைமறித்து, தங்கள் மக்களுக்குள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கே அவர்களுக்கிடையில் ஒருமித்த கருத்து இல்லை. சிறிலங்கா சுதந்திரக்கட்சியை எப்படி ஓரம் கட்டித் தாம் தமது கட்சிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கை அதிகரிக்கலாமென்பதில், ஜே.வி.பி ஈடுபட்டிருக்கிறது. ஜே.வி.பியை வெளியேறுமாறு மறைமுகமாகச் சொல்லியும் - அது அட்டை போல் ஓடிக்கொண்டு, உபத்திரம் கொடுப்பதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் நினைக்கின்றனர்.

வடக்கு - கிழக்கில் கடற்கோளினால் பாதிக்கப்பட்டு, அல்லல்படும் மக்களுக்கு உதவி வழங்குவதற்குப் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கே விடுகிறார்களில்லை. இவர்கள் எப்படி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒரு திட்டம் வகுக்க ஒத்து வருவார்கள் ? என்று கேட்டேன்.

நீர் சொல்வது உண்மைதான். ஆட்சிபீடத்திலுள்ள கட்சிகள் தமக்குள் ஒற்றுமைப்பட்டு ஒரு திட்டத்தைத் தயாரிக்காமல், தங்களுக்குள் இழுபறிப்பட்டு பிரச்சினையையும் இழுபறிக்குள் மாட்டிவைத்துக் கொண்டிருந்தால், இலங்கைக்கு உதவியளிப்பதாக உறுதியளித்த நாடுகள் அந்த உதவியைக் கொடுக்காமல் விடக்கூடும்.

கடற்கோளால் பாதிக்கப்பட்டு, அல்லற்படும் மக்களுக்குக் கூட உதவமுடியாமல் இவர்கள் தங்களுக்குள் முரண்பட்டு நிற்பதால், மக்கள் தானே கஷ்டப்படுகிறார்கள். இதற்காகத்தான் அவர்கள் முதலில் தங்களுக்குள் பேசி முடிவுக்கு வரவேண்டும் என்கிறேன் என்றார் பரமசிவம்.

இனவெறியைக் கக்கும் கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று - நேற்றுத் தனது ஆசிரிய தலையங்கத்தில் புலிகள் தங்களுக்குள் மோதிக் கொள்வதுதான் இப்போது பிரச்சினையென்றும், இதற்கு முடிவுகாண வேண்டுமென்றும் திசைதிருப்பி விடுகிறது பார்த்தீரா என்று கேட்டேன்.

இதுபோன்ற இனவெறி ஊடகங்களும், அரச ஊடகங்களும், இஸ்லாமியர்களையும் தூண்டிவிட்டு நிலைமையைக் குழப்புவதில்தான் முன்நிற்கின்றன.

நம்மவர்கள் சிலரின் நடவடிக்கைகளும் அவர்களுக்கு வாய்ப்பாக அமைந்து விடுகின்றன. அரசினதும், பேரினவாத ஊடகங்களினதும் பொய்ப்பிரசாரங்கள் வெளிநாடுகளில் பொய்த்துப் போய் விடுகின்றன. கோடரிக்காம்பு எங்கே இருக்கிறதென்பதே தெரியாது. அதன் பெயரில் அதன் ஆட்கள் என்று சிதறி ஓடிப்போனதுகளையும் புலநாய்வுத்துறையினர் ஒன்று கூட்டிக் குழப்பத்தை உண்டு பண்ணுகிறார்கள்.

புலனாய்வுத்துறையினரும் பாதுகாப்புப் படையென்று சொல்லப்படும் அரச படைகளும் தமிழர் தாயகத்திலிருந்து முற்றாக வெளியேறிவிட்டால் நாட்டில் அமைதி தானாகவே திரும்பிவிடும் என்றார் பரமசிவம்.

மக்கள் ஒற்றுமையாக, ஒரே குரலில், ஒரேதலைமையின் கீழ் இயங்க வேண்டும். இன்றுள்ள நிலையில் தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையுடன் சுதந்திரமாக வாழ்வதற்கு வழி தேடுவதைத் தவிர வேறு வழியில்லையென்றேன்.

தமது உயிரைக் கொடுத்து, தாய்மண்ணில் முக்கால் பகுதியை விடுதலைப் புலிகள் மீட்டெடுத்துள்ளனர் . மீட்டெடுத்த பகுதியில் மக்கள் எந்தவித அச்சமுமில்லாமல் வாழ்கின்றார்கள். புதிய புதிய தொழில்களை அவர்கள் ஆரம்பிக்கிறார்கள்.

புத்தம் புதிய கலைகளை உருவாக்குகிறார்கள். கல்விக் கூடங்கள் சிறப்பாக நடக்கின்றன. கடற்கோளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவச்சென்று உதவியவர்களும் விடுதலைப் புலிகளே என்றேன்.

மீட்டெடுத்த பகுதியில் அருமையான நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றதென்பதை கடற்கோளுக்குப் பின் இங்குவந்து பார்த்த வெளிநாட்டவர்கள் பாராட்டுகிறார்கள். பாவம் சங்கரியாருக்குத்தான் பார்வை சரியில்லை என்றார் பரமசிவம்.

யாழ்ப்பாணத்திலும் மற்றும் விடுவிக்கப்படாத சில இடங்களிலும் வழிப்பறி ,கொள்ளை, திருட்டுக்கள், வீதிகளில் தவறாக நடப்பவர்கள், அமைதியை விரும்பும் மக்களுக்குத் தொல்லைகள் கொடுப்பவர்களைக் கண்டு மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் தெரியுமா? என்று கேட்டேன்.

1995 ஆம் ஆண்டுக்கு முன் சிலகாலம் இப்பகுதியிலும் எல்லாம் ஒழுங்காகத்தான் இருந்தது. காடைத்தனங்களிருக்கவில்லை. களவு, கொள்ளை, வழிப்பறி இருக்கவில்லை. பெண்கள் கழுத்து நிறைய நகைகளை அணிந்து அச்சமின்றித் திரிந்தார்கள்.

இப்பொழுது ஆண்களே ஒரு கழுத்துச் சங்கிலிபோட்டுத் திரியமுடியவில்லை. வீதிகளில் குப்பை கூழங்கள் கூடக் குவிந்து கிடந்ததில்லை. மீண்டும் இங்கே புலிகளின் நடமாட்டம் எப்போது வரும். அவர்களின் நிர்வாகம் எப்போது வரும் என்றுதான் இப்போது மக்கள் இங்கு கேட்கிறார்கள் அப்படித்தானே.

இதையேதான் மக்கள் கேட்கிறார்கள். வீதிகளிலும், வீடுகளிலும் அச்சமின்றி மக்கள் வாழ்வதற்கு விடுதலைப் புலிகளின் நிர்வாகம் இங்கு தேவை என்கிறார்கள். மக்கள் ஒற்றுமைப்பட்டால் அந்த நிர்வாகம் இங்கு வருவது வெகு தூரத்தில் இருக்காது என்று சொல்லி நடந்தார் பரமசிவம்.

# வாசகர் நோக்கு

## தடுக்கப்படவேண்டிய துஷ்பிரயோகம்!

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாக சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து காணப்படுவதாகவும், பாடசாலை மாணவர்களிலிருந்து பெரியவர்கள வரை இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டுவருவதாகவும் - இவ்வாறான சம்பவங்களில் ஒருசில பெண்கள் துணைபோவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனை எவ்வாறு தடுப்பது? சிந்திக்கவேண்டியது அவசியமும், அவசரமும் கூட!

ஒவ்வொரு பிரதேசங்களிலும் கலாசார குழுவொன்று உருவாக்கப்பட்டு, கலாசாரத்தை மீறுபவர்களைப் பிடித்து எச்சரிக்கை செய்தும், அரசியல் துறையினரிடம் அவர்களை ஒப்படைத்தும் விடுகிறார்கள். இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றபோதும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்கிறது.

அண்மையில் யாழ்ப்பாணம் - கச்சேரிக்கு சமீபத்திலுள்ள பிரதேசத்தில் மழைக்கு ஒதுங்கிய 10 வயது சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ஈடுபட்டவர் உயர்கல்வி கற்கும் மாணவராம். இதற்கு ஓர் இளம்பெண்ணும் துணைபோனவராம். சம்பவம் தொடர்பாக ஓர் இளைஞனை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். தற்போது ஒவ்வொரு பிரதேசங்களிலும் சிறுவர் மேம்பாட்டு அதிகாரிகள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களின் செயற்பாடு எவ்வாறு இருக்கப்போகிறது? இது போன்ற செயற்பாடுகள் தடுக்கப்படவேண்டியது முக்கியம்.

*யாழ்ப்பாணம்* *தம்பிராசா*



# புத்தாண்டு உங்களுக்கு எப்படி?

## கடகம்

கடகராசி அன்பர்களே!

இது ஏழரைச் சனிக்காலம் என்றாலும், இந்த ஆண்டு சீரானதாக அமையும். சனி பகவான் இந்த ஆண்டின் தொடக்கத்தில் 12 ஆம் இடத்தில் இருப்பதால், தொல்லைகளைச் சந்திக்க வேண்டி வரலாம். அவர் ஜூன் மாதம் 26 ஆம் திகதி உங்கள் ராசிக்கு வருகிறார். இதுவும் அவ்வளவு சிறப்பான இடம் அல்லதான். அவர் அலைச்சலை உருவாக்குவார். குரு பகவான் தற்போது 3 ஆம் இடத்தில் இருக்கிறார். இதுவும் உகந்த நிலை அல்ல. அவர் உங்கள் முயற்சிகளில் தடைகளைத் தரலாம். அவர் செப்ரெம்பர் 19 ஆம் திகதி இடம் மாறி துலா ராசிக்குச் செல்கிறார். இதுகூட நல்ல இடம் அல்ல.

அதன் பின் அவர் உறவினர்கள் வகையில் பிரச்சினையைத் தரலாம். நிழல் கிரகமான ராகு ஆண்டுமுழுவதும் 9 ஆம் இடத்தில் இருப்பார். அவரும் உங்களுக்கு பல்வேறு தடைகளைத் தரலாம். என்ன எல்லா கிரகங்களும் இப்படி பின் தங்கிய பலன்களை தந்தால், எப்படி இந்த ஆண்டு சிறப்பானதாக அமையும் என்று கேட்பது புரிகிறது. அதற்கு ஆதாரமாக இருப்பது கேது. ஞானகாரகனான அவர் 3 ஆம் இடத்தில் இருப்பது மிகவும் சிறப்பானதாகும். அவர் தெய்வ அனுகூலத்தைக் கொடுப்பார். அதன் மூலம் நீங்கள் நினைத்ததை சிறப்பாகச் செய்து முடிக்கலாம். மேலும் செப்ரெம்பர் மாதம் வரை குருவின் அனைத்துப் பார்வைகளும் சாதகமாக உள்ளது. இதனால் நன்மை அதிகரிக்கும்.

மேற்கண்ட கிரகங்கள் தவிர சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், செவ்வாய் போன்ற கிரகங்களும் அவ்வப்போது நன்மை தருவார். மேற்கண்ட நிலையில் இருந்து விரிவான பலனைக் காணலாம்.

தெய்வ அனுகூலம் கூடியிருப்பதால், நீங்கள் எதையும் சிறப்பாகச் செய்து முடிக்கலாம். ராகுவால் வரும் தடைகளை உங்கள் சாமர்த்தியத்தால் முறியடிக்கலாம். பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். தேவைகள் பூர்த்தியாகும். மதிப்பு, மரியாதை எதிர்பார்த்தபடி இருக்கும். செலவினங்களைக் குறைத்து சிக்கனமாக இருப்பவர்கள் சாமர்த்தியசாலிகள்.

குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறை இருக்காது. செப்ரெம்பர் மாதத்துக்குள் சுப நிகழ்ச்சிகள் கைகூடும். விருந்து, விழா என சென்று வருவீர்கள்.

புதிய வீடுகள் கட்ட நினைப்பவர்கள் தங்கள் எண்ணத்தை ஆண்டின் தொடக்கத்தில் நிறைவேற்றிக்கொள்ளலாம். ஜூன் மாதத்துக்குப் பிறகு உறவினர்கள் வகையில் மனக்கிலேசம் வரலாம். அவர்கள் வகையில் வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். தூரத்து உறவினர்கள் வகையில் இருந்து விரும்பத்தகாத செய்தி வரலாம். உத்தியோகம் பார்ப்பவர்கள் சீரான நிலையில் இருப்பர். அதிக பளுவை சுமக்க வேண்டியிருக்கும். சிரத்தை எடுத்தால் தான் உங்கள் கோரிக்கை நிறைவேறும். சிலர் தங்கள் பொறுப்பை இழக்கும் நிலை உருவாகலாம். எனவே மேல் அதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும். சிலர் இட மாற்றம் காணலாம். குருவின் பார்வையால் நிலைமையைச் சமாளிக்கும் வல்லமை ஏற்படும். உங்கள் பொறுப்புகளை தட்டிக்கழிக்காமல் செய்யவும்.

வியாபாரிகள் உழைப்புக்கு ஏற்ற முன்னேற்றம் காணலாம். எதிரிகளின் இடையூறு அவ்வப்போது தலைதூக்கலாம். யாரையும் எளிதில் நம்பவேண்டாம். ஜூன் மாதத்துக்குப் பிறகு சிலர் தொழில் விடயமாக ஊரைவிட்டு இடம் பெயரும் நிலை ஏற்படலாம். புதிய வியாபாரம் தற்போது வேண்டாம். எதிலும் அதிக முதலீடு செய்ய வேண்டாம்.

கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்கள் பெறப்பெற்று முன்னேற்றம் காணலாம். ஆனால் அதற்காக அதிக சிரத்தை எடுக்க வேண்டியிருக்கும். செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு எதிர்பார்த்த புகழ், பாராட்டு கிடைக்காது. சிலர் வெளிநாடு சென்று வருவீர்கள்.

மாணவர்கள் இந்தக் கல்வி ஆண்டில் நல்ல முன்னேற்றம் காண்பர். மதிப்பெண் அதிகம் கிடைக்கும். குருவின் பார்வையால் பலரது வெற்றிக்கு உத்தரவாதம் தரலாம். ஆனால் அடுத்த கல்வியாண்டு இதேபோல் இருக்காது. அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும்.

விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும். அதே நேரம் அதிக செலவு பிடிக்கும் பயிரைத் தவிர்க்கவும். சிலர் ஆண்டின் தொடக்கத்தில் கடன் பட்டாவது புதிய சொத்து வாங்கலாம். நெல், சோளம் போன்ற பயிர்கள் நல்ல பலனை தரும். காய்கறிகள் ஓரளவு வருமானத்தைக் கொடுக்கும். தொழில் செய்பவர்களுக்கு தேவைக்கேற்ற வருமானம் கிடைக்கும்.

வழக்கு விவ்காரங்கள் சீராக இருக்கும். ஆண்டின் முற்பகுதியில் தீர்வாகும் வழக்குகள் உங்களுக்கு சாதகமாக அமையலாம். அதன்பின் பாதகமாக எதுவும் வராது. அதே நேரம் எந்தப் புதிய வழக்குகளிலும் சிக்கவேண்டாம்.

பெண்கள் மகிழ்ச்சி பொங்க காணப்படுவர். கணவரின் அன்பு கிடைக்கும். ஆண்டின் தொடக்கத்தில் புத்தாடை அணிகலன்கள் வாங்கலாம். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். வேலை செய்யும் பெண்கள் வெளியூர் செல்லும் நிலை ஏற்படும். உடல்நலன் சிறப்பாக இருக்கும். மருத்துவச் செலவு குறையும்.

பரிகாரம் :- கேதுவைத் தவிர மற்றைய எந்த கிரகமும் சாதகமாக இல்லாததால், சந்தர்ப்பம் கிடைக்கும்போது நவக்கிரகங்களைச் சுற்றி வாருங்கள். தினமும் காக்கைக்கு அன்னமிட்டு உண்ணுங்கள்.

# தகவல் தொழில் நுட்பமும் நடைமுறைச் சிக்கல்களும்

கல்வியில் நடைமுறைக் கொள்கையில் காலத்துக்குக் காலம் பூரணமற்ற தன்மை நிலவி வருவது அனைவருக்கும் தெரிந்த விடயம். இந்தப் பூரணமற்ற தன்மை தற்போது பாடசாலைகளில் நடை முறைப்படுத்தப்படும். கலைத்திட்ட அமைப்புக்களிலும் மேலோங்கிக் காணப்படுகிறது. அதில் ஒன்று தான் தகவல் தொழிநுட்பம் என்னும் புதிய பாடவிதானமாகும்.

**நடைமுறைப்படுத்தியதன் நோக்கம்.**

மேலை நாட்டுக் கல்வி முறைகளோடு ஒப்பிடும் போது, எமது நாட்டுக் கல்வி முறை - வெறும் பரீட்சையை மையமாகக் கொண்ட மதிப்பீட்டு முறையை அடிப்படையாகக் கொண்டது. திறன் விருத்தியை மையமாகக் கொண்டு, ஒரு குறிப்பிட்ட இலக்கை மாத்திரம் எதிர்பார்த்துச் செயற்படுகின்ற ஒரு கல்வி முறையாக இருந்தது. இந்தக் குறைபாடுகளை அடிப்படையாகக் கொண்டு, புதிய கல்விச் சீர்திருத்த வரைமுறைகளுக்கு அமைவாக தொழில் விருத்தியோடு கூடிய கல்வி முறையும் எமது நாட்டுக்குத் தேவை என்ற அடிப்படையிலும். நவீன ரீதியான கணினி யுகத்தோடு போராட வேண்டிய எதிர்காலத்தை தேவையின் அடிப்படையிலும் தான் இந்தத் தகவல் தொழிநுட்பம் எனும் பாட நெறி கல்வியமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்டது.

**பாடப்பரப்பு சம்பந்தமான சரியான விளக்கங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை.**

பாட விதானத்தை அறிமுகப்படுத்திய கல்வி அமைச்சு - இதை 12 ஆம் தரத்துக்கு நடைமுறைப்படுத்த உத்தரவிட்டது. ஆனால் இந்தப் பாடப்பரப்புக்கு ஒதுக்கப்பட்ட பாடத்திட்டம் பற்றிய ஒரு பூரண விளக்கத்தை ஆசிரியர்களுக்கு வழங்கவில்லை. இந்தப் பாடத்திட்டம் - எந்த அளவுக்கு, குறிப்பிட்ட தரத்துக்குப் பொருத்தமானது, எந்த அளவுக்கு படிமுறை ஒழுங்கிலுள்ளது. தகவல் தொழிநுட்பம் எனும் பெரிய பாடப்பரப்பளவை எந்தளவுக்குப் பூரணப்படுத்துகிறது, தொழில் விருத்தி எண்ணக் கருவுக்கு எந்தளவுக்கு உதவி அளிக்கிறது என்பவையெல்லாம் பல ஆசிரியர்கள் மத்தியில் விடைகளற்ற வினாக்களாக மேலோங்கியுள்ளது.

நிலைமை இப்படியிருக்க, 2006 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு பொது ஆங்கிலம் எனும் பாடப்பரப்பு நிறுத்தப்பட்டுள்ளது. அதே வேளை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் (ED /03/38) 1/27/1 SUB)எனும் இலக்கமிடப்பட்டு 2005/03/07 ஆம் திகதி அனுப்பட்ட கடிதத்தின் பிரகாரம் தகவல் தொழிநுட்பம் எனும் பாடத்துக்கான பொதுப் பரீட்சை முதன் முறையாகப் பரீட்சைத் திணைக்களகத்தால் நடத்தப் போவதாகவும், இந்த ஆண்டுக்குரிய பரீட்சாத்திகளின் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு அதிபர்களிடம் வேண்டப்பட்டது. இது பொது ஆங்கிலம் எனும் பாடத்துக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட பரீட்சையா? உயர்தரப் பெறுபேற்றில் சேர்த்துக் கொள்ளப்படுமா? என்பவையெல்லாம் விளக்கங்களற்ற வினாக்களாகப் பாடசாலைகளில் பரிமாறப்படுகின்றன. இது பற்றி எந்த விதமான விளக்கங்களும் பாடம் சம்பந்தமான ஆசிரியர்களுக்கு வழங்கவில்லை.

தற்போது வரப்போகும் பாடசாலை விடுமுறையில் இந்தப் பாட ஆசிரியர்களுக்கு ஒரு செயலமர்வு உண்டு என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலமர்வு இந்த வினாக்களுக்கு விடையளிக்குமா?என்பது பொறுத்திருந்தது தான் பார்க்க வேண்டும். இப்படியான விளக்கங்களற்ற வினாக்கள் ஆசிரியர்களுக்கே எழும் போது, எப்படி மாணவர்கள் மத்தியில் நம்பிக்கையூட்டிக் கற்பிப்பது ? இந்தப் பரீட்சைக்கு எதை மையமாக வைத்துக் கற்பித்து மாணவர்களை அனுப்புவது? என்பதே மிகவும் சிக்கலுக்குரியதாக உள்ளது. இந்தப் பரீட்சைக்கு முன்பு இந்தப் பாடப்பரப்பை உள்ளடக்கிய ஒரு ஆசிரியர் கைநூல் கூட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. பொதுப்பரீட்சையை மையமாகக் கொண்டு, மாதிரி வினாத்தாள் கூட ஆசிரியர்களுக்கு அனுப்பப்படவில்லை. புதிய பரீட்சை, புதிய பாட அறிமுகம். புதிய பாடத்திட்டம், பரீட்சையின் மொழிமூலம் ஆங்கிலம் இவையெல்லாவற்றையும் வைத்துச் சிந்தித்துப் பார்க்கும் போது, இந்தப் பாடமே மாணவர்கள் மத்தியில் கேலிக்குரியதாகிறது.

**வளங்களற்ற நிலையில் இந்தப் பாடம்**

நிர்வாகச் சிக்கல்கள் ஒரு புறம் இருக்க இந்தப் பாடத்துக்குரிய போதிய வளங்களும் பாடசாலையில் இல்லாமல் இருக்கிறது. ஆளணி வளங்களை எடுத்துக் கொண்டால், போதிய பயிற்சி பெற்ற இந்தப் பாடம் சம்பந்தமான ஆசிரியர்கள் பாடசாலையில் இல்லாமல் இருக்கிறது. வேறு பாட ஆசிரியர்களைப் பயன்படுத்த முற்படும் போது, அவர்களுக்கான போதிய பயிற்சிகளையும் மாகாணக்கல்வியமைச்சு வழங்குவதாகவில்லை. பௌதீக வளங்களை எடுத்துக் கொண்டால், கணினிக் காற்றே வீசாத பல கஷ்ரப்பிரதேசப் பாடசாலைகள் இருக்கின்றன. ஒரு சில பாடசாலைகளில் நலன்புரிச்சங்கங்கள் பழைய மாணவர்களின் நிதி ஒதுக்கீட்டின் பெயரில் 30 மாணவர்களுக்கு ஒரு கணினியை வைத்து கண்காட்சி நடத்துகின்றன. செயல் முறை என்பது அவசியம் தேவைப்படும். இந்தப் பாடத்துக்கு இப்படிப்பட்ட பௌதீக வளங்களை வைத்து, எப்படி நடைமுறைப்படுத்துவது. எப்படிப் பொதுப்பரீட்சைக்கு மாணவர்களை அனுப்புவது? எப்படி இந்தப் பாடத்தை வைத்து பல்கலைக்கழக வெட்டுப்புள்ளியைத் தீர்மானிப்பது? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். எமது கல்வியியல் முறைமை எந்தக் கட்டத்தில் நிற்கிறது என்று .

ஆர்.கே.சேனன்

# மனிதப் பிறவியின் மாண்பு

மனிதனுடைய வாழ்க்கை எப்படியோ வாழ்ந்து முடிவது என்பது அன்று இப்படி இப்படி வாழ வேண் டும் என்ற குறிக்கோளோடு இயங்குகிற வாழ்க்கை மனிதனுடைய வாழ்க்கை. உயிர் உய்வதற்கான வாய்ப்புள்ள வாழ்க்கை மனிதனுடைய வாழ்க்கை. ஆசையிலே அழுந்தி அழுந்தி அல்லறுற்று யோசிக்கும் வேளையில் உண்பதுவும், உறங்குவதுமாய் முடிவதன்று மனிதனுடைய இலட்சியம். அல்லற் பிறவி அறுத்துப் பேரானந்தப் பெரு வெள்ளத்தில் மூழ்கித் திளைப்பதற்குத் தான் மனிதப் பிறவியே தவிர, பொருள் அவற்றைப் பொருள் என்றுணரும் மருளால் பிறவிப் பெருங்கடலில் அழுந்திக் கிடப்பதற்கு அன்று.

மனிதனின் குறிக்கோள் தீராத ஆசையிலே மாறாத கவலைக்குடம் கொடுத்து மயங்குவதன்று. குறள் குரல் கொடுக்கிறது. 'நெரு நெல் உளனொருவன் இன்றில்லை' என்றும் பெருமையுடைத்திவ்வுலகு நேற்று இருந்தவன்இன்று இல்லை இது தான் இந்த உலகின் பெருமை. மண்ணில் தோன்றிய மனிதர்கள் எல் லோருமே ஒரு நாள் மறைய வேண்டியர்களே. எவ்வளவு காலம் மனிதன் வாழ்ந்தான் என்பதிலே அல்ல. எப்படி வாழ்ந்தான் என்பதிலே தான் மனித வாழ்வின் பெருமையே அடங்கியிருக்கிறது.

பசித்துப் புசிப்பதும், படுத்து உறங்குவதும் மட்டுமல்ல மனித வாழ்க்கை. பிறவிப் பெருங் கடலை நீந்திக் கரை சேரும் பெருவாய்ப்புள்ள வாழ்க்கை - மனிதனுடைய வாழ்க்கை என்பதை நாம் உணர வேண்டும். பிறவியைப் பெரியதொரு துன்பம் என்று பேசுகிறோம். என்றாலும் தேவாரம் சொல்கிறது மனிதப் பிறவி தேவைதான் என்று . 'குனிந்த புருவம் கொவ்வைச் செய்வாயிற் குமிண் சிரிப்பும்

மனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீரும் இனித்த முடைய எடுத்த பொற்பாதம் காணப்பெற்றால்

மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே'

என்று அந்தத் தேவாரம் பேசுகிறது. எனுவே, மானிடப் பிறவியின் மகத்துவமெல்லாம் மனம், மொழி, மெய்யால் தனக்கு உவமையில்லா தான் தானை நினைத்துருகி மனக்கவலையை மாற்றி மகிழ்வதிலே தான் இருக்கிறது.

மனித வாழ்வின் மாண்பெல்லாம் மற்றைய விலங்குகள், பறவைகளைப் போல யோசிக்கும் வேளை யில் உண்பதுவும், உறங்குவதுமாய் முடிவதிலேயின்றி, தனியொரு முதல்வனை நாடிப் பிறவிப் பெருந்துய ரைத் தவிர்த்து கொள்வதிலே தான் இருக்கிறது.

எனவே 'காதலாகிக் கசிந்துகண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பதும் நாதன் நாமம் நமச்சிவாயவே' என்பதை நாம் தெளிவாக உணரவேண்டும். உறுதியக நம்ப வேண்டும். சிக்கெனப்பற்ற வேண்டும்.

**பேரின்பம்** :- போற்றுவதற்குரிய வாழ்க்கை முறை - நில்லாதவற்றை நிலையானவை என்று உணரும் புல்லறிவால் தடுமாறுவது அன்று- இப்படி நான் சொல்வதால் உலக வாழ்க்கை இன்பமற்றது என்று சொல்வதாக நினைத்துவிடக் கூடாது.

இறைவனாலே இயங்குகிற உலகம் இன்பமற்றது என்று, யாரால் கூறமுடியும். உலக வாழ்க்கை இன்ப முள்ளது தான். ஆனால் அது அழிவற்ற இன்பமென்று, முடிவான இன்பமென்று சொல்லிவிட முடியாது.

'வானாகி மண்ணாகி வளி ஆகி ஒளி ஆகி ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய் கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டும் குமிழ் சிரிப்புக் கோமானை நினைத்துருகி நெஞ்சம் பெறும் இன்பமிருக்கிறதே'அது ஒன்று மட்டும் தான் எல்லையற்ற இன்பம், இணையற்ற இன்பம், அழிவற்ற இன்பம். அதனாலே தான் அதைப் பேரின்பம் என்று பிரித்தும், பெருமைப்படுத்தியும் நாம் பலவாறு பேசுகிறோம்.

**பேரின்பப் பாடல்கள்.**

மனமுள்ள அழகான ஒரு மலர்க்காடு, வண்ண மலர்க்குலம் தேனீயை வா வா என்று கூவாமல் கூவி அழைக்கிறது. தேன் பொங்கும் நறுமணம் கமழும் மலரை ஒரு தேனீ தேடி ஓடி வருகிறது. அந்தத் தேனீயை அழைத்துப் பேசுகிறது. மணிவாசகரின் திருவாசகம்.

'திணைத்தனை உள்ளதோர் பூவினில்
தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண் தொறும்
பேசுஞ் தொறும் எப்போதும்
அனைத் தெலும் (பு) உள்நெக
ஆனந்தத் தேன் சொரியும்
குணப்புடை யாதுக்கே சென் (று)
ஊதாய் கோத்தும்பி'

(திருக்கோத்தும்பி 3)

அற்ப உலக இன்பங்களை விட்டுப் பேரானந்தத்தை நாடு என்று மனத்துக்கு உபதேசம் செய்வதாக அமைந்த பாடல் இது.

இதைத் தும்பிக்குச் சொல்வது போல் மாணிக்க வாசகர் மனித சமுதாயத்துக்குத் தான் சொல்கிறார்.

'ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தனை - சிவ பெருமானை - நாத்தழும் பேற ஏத்தி மகிழும் வாழ்வு தான் முழுமையான வாழ்வு - பெருவாழ்வு - தெய்வீக வாழ்வு.

நெஞ்சகத் கூத்தன் நிறை பெற்ற வாழ்வு தான் குறைவற்ற வாழ்வு -நிறைவுள்ள வாழ்வு - நிலையான வாழ்வு' இதை நாம் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

இறைவன் பெருமைகளை இதயத்துக்கு உணர்த்தும் பாடல்கள் - இறைவனிடம்நம்மை ஈடுபடுத்தும் பாடல்கள் - பரம் பொருளை உருகிப் பருக வைக்கும் பாடல்கள் - கைந்தமிழ் மிகப் பலவாயிருக்கின்றன.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ- வானுறையும் தெய்வத்தை நாட - நம்மைத் தூண்டி விட்டுத் துணை புரியும் நூல்கள் செந்தமிழில் மிகப் பலவாகும்'. தெற்கு தமிழ்த் தேனமுத வெள்ளமென திரண்டு வரும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருவாய்மொழி தெய்வ வள்ளுவர் செய்த வான் மறை தாயுமானவர் தந்த பாடல்கள் பட்டினத்தார் பாடிய பாடல் என்று மட்டுமல்லாமல் - இன்னும் எத்தனை எத்தனையோ இருக் கின்றன செந்தமிழில். நம்மை எச்சரித்து நல்வாழ்வுக்கு வழிகாட்டும் கவிக் குயில்கள் தமிழ்ச் சோலை யிலே - பக்திச் சோலையிலே மிகப்பல. தவறான பாதையிலே செல்லும் சமுதாயத்தைத் தடுத்தாட் கொள்ளக் காத்திருக்கும் பெரியோர்களுக்கு தமிழுலகில் கணக்கே இல்லை. தளர்ந்து விடத் தேவையில்லை. தக்கமுறையிலே செயற்படுவோம்.

எம்.பீ.அருளானந்தம்.


# புதிய பாப்பரசர் 16வது பெனடிக்ற்



பாப்பரசர் தெரிவானதை அறிவிக்க மணி ஒலிஎழுப்பப்படுகிறது.



மக்களுக்கு ஆசீர்வாதம் அளிக்கும் பாப்பரசர்



பல்கனியில் காட்சி கொடுக்கும் பாப்பரசர்




பாப்பரசரை வரவேற்கும் கன்னியாஸ்திரிகள்



மக்களுக்கு ஆசீர்வாதம் அளிக்கும் பாப்பரசர்





பாப்பரசர் தெரிவானதை அறிவிக்க வெண்புகை வெளியேற்றப்படுகிறது.



உரைநிகழ்த்தும் பாப்பரசர்

## கிறிஸ்தவத்தில் நம்பிக்கை வைத்தால் மதப்பழமைவாதிகளென முத்திரை!

### கூறுகிறார் கர்தினால் ரட்சிங்கர்

(ரோம்)

ரோமன் கத்தேலிக்க கிறிஸ்தவர்களின் மதத் தலைவரை (பாப்பரசரை) தெரிவுசெய்யும் கர்தினால்களின் ரகசியக்கூட்டம் வத்திக்கானில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் தொடங்கியது.

அந்தக் கூட்டத்துக்கு முன்பு வத்திக்கானில் உள்ள புனித பீற்றர்ஸ் சதுக்கத்தில் உள்ள தேவாலயத்தில் நடந்த பிரார்த்தனையில் உரை யாற்றினார் அடுத்த பாப்பரசராகத் தெரிவு செய் யப்படுவார் என்று கூறப்படும் ஜெர்மனியைச் சேர்ந்த கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் (வயது 78).

இந்தப் பிரார்த்தனையில் உலகம் முழுவதி லும் இருந்து வந்த 52 நாடுகளைச் சேர்ந்த 114 கர்தினால்கள், பிஷப்புகள் பங்கேற்றனர்.

கர்தினால்களில் மிகவும் செல்வாக்கு மிக்க வர் ரட்சிங்கர்.

அவர் ஆற்றிய உரையில், தேவாலயத்தின் கோட்பாடுகளைக் கடைப்பிடித்து கிறிஸ்தவத்தில் முழு நம்பிக்கை வைத்தால் நம்மை மதப்பழமை வாதிகள் என்று முத்திரை குத்துகின்றனர் என் றார்.

1981 முதல் கிறிஸ்தவ மதக்கோட்பாடுகள் தொடர்பான கூட்டங்களுக்குத் தலைமை வகித்த



வர். பெண் பாதிரியார்கள் கூடாது, கருக் கலைப்பு, குழந்தை பெற்றுக்கொள்ள கட்டுப்பாடு போன் றவை தொடர்பான பிரச்சினைகளில் வத்திக்கா னின் நிலைக்கு தீவிரமாக ஆதரவளித்து வந்த வர். புதிய பாப்பரசராக ஜெர்மனியின் ஜோசப் ரட் சிங்கருக்கு அதிக வாய்ப்பு இருப்பதாக பேடி பவர். கொம் என்ற இணையத்தளம் தனது கருத்துக் கணிப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித் திருந்தது குறிப்பிடத்தக்கது.

## சதாமின் மரணதண்டனைக்கு அனுமதி வழங்கப்படமாட்டாதாம்

### ஈராக்கின் புதிய ஜனாதிபதி கூறுகிறார்

அமெரிக்க இராணுவத்தினரின் சிறையி லுள்ள ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு மரண தண்டனை விதித்தால் அதற்கு அனுமதி வழங்கப்படமாட்டதென ஈராக் கின் புதிய ஜனாதிபதி ஜலால் தலபானி தெரிவித் துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள் ளார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது –

ஈராக்கின் ஜனாதிபதி பதவியென்பது மூவ ரைக் கொண்டது. என்னைத் தவிர இரண்டு துணை ஜனாதிபதிகள் உள்ளனர். எனவே, எந்த முடிவாக இருந்தாலும், நாம் மூவரும் சேர்ந்தே எடுக்கவேண்டும்.

புதிய தலைமையின் அனைத்து உறுப் பினர்களும், பெரும்பான்மையான ஈராக்கியர்க ளும் சதாமுக்கு மரணதண்டனை விதிக்க வேண்டுமென விரும்புகின்றனர். ஆனால், நான் மட்டுமே மாறுபட்ட கருத்தைக் கொண்ட வனாக உள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார்.




### ஓய்வூதிய உத்தியோகத்தர்

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஓய்வூதிய திணைக்களம் – ஓய்வூதிய உத்தியோகத்தர் பதவிக்கு கீழ்க்காணும் தகைமைகொண்ட விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். வயதெல்லை 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படா மலும் இருக்கவேண்டும்.

ஆட்சேர்ப்பு முறையானது ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகளை நடத்தி ஆற்றல் களின் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும் விண்ணப்பதாரி 2005.05.03ஆம் திகதி யன்றோ அதற்கு முன்போ கிடைக்கக்கூடியவாறு ஓய்வூதியப் பணிப்பாளர், ஓய்வூதியத் திணைக்களம், செயலக அலுவலகம், மாளிகாவத்தை, கொழும்பு – 10 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவேண்டும்.

### சுகாதார பராமரிப்பு, அபிவிருத்தி அமைச்சில்

சுகாதார பராமரிப்பு போஷணை – வெல்லஸ்ஸ அபிவிருத்தி அமைச்சில் கீழ் கீழ்காணும் பதவிகளுக்கு தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

அபிவிருத்தி உதவியாளர், பொதுசன கூட்டிணைப்பு உதவியாளர், உயிரியல் வைத்திய பொறியியல் உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வித்தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

வயதெல்லை 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி எதிர்வரும் 2005.04.29ஆம் திகதியன்றோ அதற்கு முன்போ கிடைக் கக்கூடியவாறு விண்ணப்பங்களை பதிவுத்தபாலில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை, இல. 385, வணபத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை கொழும்பு 10 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

நமது ஈழநாடு

The Namathu Eezhanadu

*The Leading Daily of Tamils' Homeland*

# அன்னை பூபதியின் நினைவு நாள் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவுதினமும், நாட்டுப்பற்றாளர் நாளும் தமிழர் தாயகப் பகுதியெங்கும் நேற்று உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.குடாநாட்டில் அன்னை பூபதியின் இறுதி நாள் பிரதான நிகழ்வுகள், நல்லூர் - முத்திரைச் சந்தியிலுள்ள கேணல் கிட்டு நினைவுப் பூங்காவிலும், வடமராட்சியில் அல்வாய் முத்துமாரியம்மன் கோவில் முன்றலிலும், தென்மராட்சியில் சங்கத்தானை முருகமூர்த்தி கோவிலடியிலும், தீவகத்தில் வேலணை கிழக்கு முத்துமாரியம்மன் ஆலயத்திலும் இடம்பெற்றன.

முத்திரைச் சந்தியிலுள்ள கேணல் கிட்டு நினைவுப் பூங்காவில் நேற்றுக் காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகி 2 மணிவரை நடைபெற்றன. நல்லூர் கோட்ட மக்கள் தொடர்பாடல் இணைப்பாளர் சசிரேகா வரதராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேசியக் கொடியேற்றல், பொதுச்சுடரேற்றல் நிகழ்வுகளைத் தொடர்ந்து உண்ணாவிரதத்தினை நடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஆரம்பித்துவைத்தார்.

இதன் பின்னர் யாழ்.பல்கலைக் கழக உடற்கல்வி விரிவுரையாளர் இளம்பிறையன், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதனையடுத்து தமிழீழ மாணவர் அமைப்பினரால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட விவாதப் போட்டியின் இறுதி நிகழ்வு இடம்பெற்றது. இதில் யாழ்.மத்திய கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள் பங்குபற்றினர்.

இந்த நிகழ்வில் கூட்டுறவாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இரவு நிகழ்வுகள் மாலை 7.30 மணியளவில் ஆரம்பமாகி சிறப்புரைகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

தென்மராட்சியில், தென்மராட்சி கல்வி வலய மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன், சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து கண்டி வீதி வழியாக நிகழ்வு இடம்பெற்ற முருகமூர்த்தி கோவிலடிக்கு அன்னை பூபதியின் உருவப்படம் தாங்கிய பேரணி நகர்ந்தது.

இங்கு அமைக்கப்பட்ட விசேட பந்தலில் நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் பொதுச்சுடரேற்றல், தேசியக் கொடியேற்றலை அடுத்து பேராசிரியர் சண்முகலிங்கன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் ஆகியோர் உட்பட பலர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

இதன்பின்னர் சுனாமி அனர்த்தத்தால் பெற்றோரை இழந்த 43 சிறுவர்களுக்கு ரூபா 2000 தமிழீழ வைப்பகத்தில் வைப்புச்செய்யப்பட்ட வங்கிப் புத்தகங்கள் சிறுவர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்த 43 பேரில் 23 சிறார்களுக்கான நிதியை மீசாலை மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும், 15 பேருக்கான நிதியை கைதடி தெற்கு சனசமூக நிலையமும் வழங்கியுள்ளன.

வடமராட்சியில் அல்வாய் முத்துமாரியம்மன் கோவில் முன்றலில் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் துரை சத்தியசீலன் தலைமையில் நினைவு நிழ்வுகள் நடைபெற்றன. பொதுச்சுடர், தேசியக் கொடியேற்றலைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் உட்பட பலர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

நெடுந்தீவிலும் தேசிய எழுச்சிப் பேரவை அலுவலகத்தில் சிறப்பான முறையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

கிளிநொச்சியில் நேற்றுக்காலை 9 மணிக்கு பண்பாட்டு மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன. பொதுச்சுடர், தேசியக் கொடியேற்றல் நிகழ்வுகளைத் தொடர்ந்து கிளிநொச்சி பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் நேசன் தலைமையில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் உட்பட பலர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

அன்னை பூபதியின் 17 ஆம் ஆண்டு நினைவாக கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மர நடுகை இடம்பெற்றது.

வட்டக்கச்சியில் மாவீரர் மண்டபத்திலும், இராமநாதபுரத்தில் அ.த.க பாடசாலையிலும் நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை, விசுவமடு, ஸ்கந்தபுரம், முழங்காவில், ஜெயபுரம் மற்றும் புதுக்குடியிருப்பு உட்பட பல்வேறு பகுதிகளிலும் மன்னார், வவுனியா, திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் அன்னை பூபதியின் நிகழ்வுகள் சிறப்பாக உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டன.

(13,113,29,09,வ,நி,இ)

# பொதுக்கட்டமைப்புமுயற்சியில் 99 வீதமான பணிகள்நிறைவு!

## மட்டக்களப்பில் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பகுதிகளை மீளமைப்பதற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கான முயற்சியின் 99 வீதப்பணிகள் பூர்த்தியாகியிருப்பதாக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்த எரிக்சொல்ஹெய்ம் - அங்கு செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்

பொதுக்கட்டமைப்புகுறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து புலிகளின் தளபதி பானுவிடம் விளக்கிக் கூறினேன். பொதுக்கட்டமைப்பை உடனடியாக செயற்படுத்துவதன் மூலம் விரைவாக நிவாரணங்களை வழங்கமுடியும் என்பதில் அவர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

கிழக்குமாகாணத்தில் இடம்பெறும் படுகொலைகள் குறித்து பானுவுடன் விரிவாக ஆராய்ந்தேன்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் முஸ்லிம்மக்கள் புறந்தள்ளிவிடப்படமாட்டார்கள். அவர்களும் அதில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

தற்போதைக்கு பொதுக் கட்டமைப்பு விடயத்தில் 99 வீதப்பணிகள் நிறைவடைந் திருக்கின்றன. எனவே, விரைவில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும்.

கௌசல்யனின் கொலையை அடுத்து கிழக்கில் கொலைச்சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இத்தகைய சம்பவங்களில் அரசாங்கமோ விடுதலைப் புலிகளோ சம்பந்தப்பட்டிருந்தால் அவர்கள் அதை உடனே நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இல்லையேல் இத்தகைய சம்பவங்கள் சமாதானத்துக்குப் பாதகமாக அமைந்துவிடலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# ஜனாதிபதிக்கு எதிரான கூட்டணி அமைக்க முஸ்தீபு!

ஜனாதிபதிக்கு எதிரான அணியினரை ஒன்று திரட்டும் நடவடிக்கையில் - ஜே.வி.பியினர் ஈடுபட்டுவருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே ஜனாதிபதியுடன் முரண்பட்டுள்ள அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் ஜனாதிபதிக்கு எதிரானவர்களின் அணியினை தோற்றுவித்து, ஜனாதிபதியை பதவி கவிழ்க்கும் முயற்சிகள் திரை மறைவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தக் கூட்டினை உருவாக்குவதற்கு ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதிக்கு எதிரான அணியில் ஜனாதிபதியின் சகோதரரும் அமைச்சருமான அனுரா பண்டாரநாயக்கவை இணைப்பதற்கு முயற்சிகள் இடம்பெற்றுள்ளன.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் முரண்பட்டுள்ள அனுரா பண்டாரநாயக்க ஜே.வி.பியின் தீவிர ஆதரவாளர் என்பதால், அவரைக் கொண்டு தமது நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்க ஜே.வி.பி. தரப்பு முயற்சிப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஜனாதிபதிக்கு எதிரான நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கினால் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராக அனுராவை நியமிப்பதற்கும் ஜே.வி.பி தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதனால், மிக விரைவில் இலங்கை அரசியலில் முக்கிய திருப்பங்கள் ஏற்படலாம் எனக் கருதப்படுகிறது. (01)

# கூட்டமைப்பு எம்.பிக்களை...

நேற்றுக்காலை சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்ட கல் முனைப் பிரசேத்துக்கு விஜயம் செய்தார்.

சுனாமி அழிவுகளை நேரில் பார்வையிட்ட அவர், அங்கு அமெரிக்க உதவித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் மீள்கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டதுடன் - கல்முனை சாஹிரா கல்லூரியில் பாதிக்கப்பட்ட கைத்தொழிலாளர்களுக்கு தொழில் உபகரணங்களையும் கையளித்தார்.

பின்னர் கொழும்பு திரும்பிய கிறிஸ்ரினா றொக்கா பல்வேறு அரசியல் தலைவர்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டார். அவர் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா இன்றிரவே நாடு திரும்பவுள்ளதால் அவருடனான சந்திப்பு இடம்பெறுவதற்கு சாத்தியமில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(01)

# கிழக்கு நிலைமைகள்...

ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது பொதுக் கட்டமைப்புத் தொடர்பாகவும், கிழக்கில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதையடுத்து எரிக் சொல்ஹெய்ம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்ட செயலகத்துக்குச் சென்று அங்கு மாவட்ட தலைமைக் கண்காணிப்பாளர் ஸ்ரீபனைச் சந்தித்து தற்போதைய நிலவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.

இதன் பின்னர் நேற்று மாலை மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பள்ளிவாசல்களின் சம்மேளனப் பிரதிநிதிகளையும் இவர் சந்தித்து உரையாடினார்.

இந்தச் சந்திப்புக்களின்போது இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் உடனிருந்தது குறிப்பிடத்தக்கது.

# இராணுவக் கட்டுப்பாட்டுப்...

டுப் பிரதேசத்தில் கருணாகுழு என்ற பெயரில் முகாம் இருப்பது குறித்தும், இராணுவப் புலனாய்வுத் துறையின் பின்னணி குறித்தும் சொல்ஹெய்முக்கு எடுத்து விளக்கினோம்.

அத்துடன், பொதுக்கட்டமைப்புக் குறித்து சொல்ஹெய்ம் எடுத்துக் கூறியிருந்தார். ஆனால், அது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்பட்ட பின்னரே கருத்துத் தெரிவிக்க முடியும்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படாததால், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதில் போராளிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கருணா குழுவைக் கை கழுவிவிட இராணுவ புலனாய்வு பிரிவு முடிவு!

## கொழும்புச்செய்திகள் தெரிவிப்பு

கருணா குழுவினருக்கு வழங்கி வரும் ஆதரவை விலக்கிக் கொள்வது குறித்து இராணுவப் புலனாய்வுத் துறை ஆராய்ந்து வருவதாக கொழும்புச் செய்தியொன்று தெரிவித்தது.

மிகப்பெரும் தாக்குதல் தளபதியாக தன்னை இனம் காட்டிய கருணா மற்றும் அவருடைய முக்கியஸ்தர்கள் மீது தொடரும் தாக்குதல்கள், அவர்கள் மீதான நம்பிக்கையை வெகுவாக குறைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் சொறிவில் பகுதியிலும் அதற்கு முன்னர் தீவுச்சேனையிலும் மிகப் பாதுகாப்புடனும், இரகசியமாகவும், அமைக்கப்பட்ட கருணா குழுவின் முகாம்கள் தாக்குதலுக்குள்ளானமை- படையினர் மத்தியில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே கொட்டாவ பகுதியில் கருணா குழுவினரின் முக்கியஸ்தர்கள் மீதான தாக்குதலின் போது கருணா குழுவின் ஒருங்கிணைப்பாளரான நீல் தம்மிக்க என்ற புலனாய்வு அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டமை மற்றும் சொறிவில் பகுதியில் நான்கு புலனாய்வு அதிகாரிகள் கொல்லப்பட்டமை போன்றவற்றால் கருணா குழு மீது புலனாய்வுத்துறை நம்பிக்கை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கருணா குழுவின் நம்பகத்தன்மை மற்றும் அவர்களின் புலனாய்வு வலையமைப்பின் பலவீனம் குறித்து ஆராய்ந்துவரும் இராணுவப் புலனாய்வுத்துறை நேரடியாக அவர்களுக்கு உதவி வழங்குவதுமற்றும் தொடர்பு அதிகாரிகளை நியமிப்பது போன்ற செயற்பாடுகளை நிறுத்துவதற்கு ஆலோசித்து வருவதாகவும் தெரியவருகிறது.

கருணா குழுவினர் இந்திய புலனாய்வுப் பிரிவினரால் இயக்கப்படுவதன் காரணமாக இராணுவப் புலனாய்வுத்துறையின் தலையீட்டைக் குறைக்குமாறு அல்லது முற்றாக நீக்குமாறு புலனாய்வுத் துறையின் உயர்மட்டத்திற்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவினால் கையாளப்படும் இலங்கை தேசிய புலனாய்வுப் பிரிவின் முக்கிய அதிகாரிகள் சிலர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாகவும், இது அமெரிக்காவின் ஆலோசனைப்படி பிறப்பிக்கப்பட்டிருக்கலாம் என்றும் தெரிய வருகிறது.

எதிர்காலத்தில் கருணா குழுவினர் முற்று முழுதாக இந்திய புலனாய்வுப் பிரிவான றோவினால் கையாளப்படுவார்கள் என்றும் அவர்களுக்குத் தேவையான சில ஒத்துழைப்புக்களை மட்டுமே வழங்குவதற்கு இராணுவப் புல னாய்வுத் துறையின் கிழக்கு மாகாண அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

# இராணுவ....

இது தொடர்பாக யாழ். நகரப் பொலிஸார் இராணுவ பவுசர் மற்றும் ஒட்டோ இரண்டையும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்று தடுத்து வைத்துள்ளதுடன், விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.